




30 ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com






நதி: 30 | பாலம்: 13 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | July 01, 2020

# இலங்கை நாடாளுமன்றத் தேர்தல் ஒகஸ்ற் 5இல்!

இலங்கையில் நாடாளுமன்றத் தேர்தல் 2020 ஒகஸ்ற் 5ஆம் திகதி நடத்தப்படும் என்று NEC எனப்படும் இலங்கையின் தேசிய தேர்தல் ஆணையம் (National Election Commission) 2020 ஜூன் 10ஆம் திகதி அறிவித்துள்ளது. இந்தத் தேர்தல் நடைபெறும் திகதியை NEC உறுப்பினர்கள் எல்லோரும் ஏகமனதாகத் தேர்ந்தெடுத்ததாக NECஇன் தலைவர் மஹிந்த தேசப்பிரிய ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இம்முறை தேர்தல் நடைபெறும் திகதி பலமுறை மாற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது. முதலில் அப்போது இலங்கை அதிபராக இருந்த மைத்திரிபால சிறிசேன 2018 நொவெம்பரில் நாடாளுமன்றத்தைக் கலைத்து 2019 ஜனவரி 5ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என உத்தரவிட்டார். இந்த உத்தரவை இலங்கை உச்சநீதிமன்றம் செல்லுபடியாகாது எனக் கூறி நாடாளுமன்றத் தேர்தல் வழமைபோல் 2020இல் தான் நடைபெற வேண்டுமெனத் தீர்ப்பு வழங்கியது.



பின்னர் 2019இல் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட இலங்கை அதிபர் கோத்தபாய ராஜபக்ச 2020 மார்ச் 3ஆம் திகதி நாடாளுமன்றத்தை மீண்டும் கலைத்து




2020 ஏப்ரல் 25ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற வேண்டுமென அறிவித்தார். இலங்கை அரசியல் சட்டப்படி இலங்கையின் நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் ஐந்து வருடம். இதனால் தேர்தல் ஐந்து வருடத்துக்கு ஒரு முறை நடைபெற வேண்டும். ஆனால் இலங்கை அதிபருக்கு நாடாளுமன்றத்தை அதன் பதவிக்காலம் 4 வருடமும் 6 மாதமும் முடிந்த பின்னர் எந்நேரமும் கலைக்கும் உரிமை உண்டு. அவ்வுரிமையைப் பாவித்தே இலங்கை அதிபர் 2015 செப்ரெம்பர் 1ஆம் திகதி பதவியேற்ற பதினைந்தாவது நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் நான்கு வருடமும் ஆறு மாதமும் முடிந்த பின்னர் 2020 மார்ச் 3ஆம் திகதி கலைத்தார்.

நாட்டில் பரவிய கோவிட்-19 தொற்றுநோயின் உலகளாவிய தொற்றுநோய்ப் பரம்பலைக் காரணம் காட்டி, நாடாளுமன்றத் தேர்தல் 2020 ஏப்ரல் 25இல் நடைபெற மாட்டாது என இலங்கையின் தேசிய தேர்தல் ஆணையம் 2020 மார்ச் 19ஆம் திகதி அறிவித்தது. 2020 மார்ச் 11ஆம் திகதிதான் உலக சுகாதார அமைப்பு (WHO) கோவிட்-19 தொற்றுநோயை உலகளாவிய தொற்றுநோய்ப் பரம்பல் (Pandemic) என அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

2020 ஏப்ரல் 20ஆம் திகதி இலங்கையின் தேசிய தேர்தல் ஆணையம் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் திகதியை 2020 ஜூன் 20 என அறிவித்தது. இலங்கையில் கோவிட்-19 தொற்றுநோயால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை இரண்டாயிரத்தைத் தாண்டியுள்ளது. கோவிட்-19 தொற்றுநோயால் இறந்தோர் 11பேர். இதனால் இலங்கை சுகாதார அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய NEC 2020 ஜூன் 10ஆம் திகதி நடைபெறவிருந்த நாடாளுமன்றத் தேர்தலை ஒகஸ்ற் 5ஆம் திகதிக்குப் பிற்போடுவதாக அறிவித்தது.

இந்த அறிவிப்பை ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்த NECஇன் தலைவர் மஹிந்த தேசப்பிரிய வாக்குச் சாவடிகள் மற்றும் வாக்குகள் எண்ணும் மையங்களில் செயற்படுத்தப்படும் புதிய சுகாதார நடவடிக்கைகளைச் சோதிக்க, ஜூன் 13 மற்றும் 14 வார இறுதி நாட்களில் ஓர் ஒத்திகைத் தேர்தல் நடத்தப்படும் என்று கூறியிருந்தார். சுகாதார வழிகாட்டுதலுக்கமைய நடவடிக்கைகள் செய்வதற்கான போதிய அவகாசத்தை நாடாளுமன்றத் தேர்தலுக்கான புதிய திகதியான ஒகஸ்ற் 5 வழங்குகிறது என NECஇன் உறுப்பினர்களில் ஒருவரான ரட்ணஜீவன் கூல் தெரிவித்தார்.

2019 நொவெம்பரில் தெரிவு செய்யப்பட்ட இலங்கையின் புதிய அதிபர் கோத்தபாய

(தொடர்ச்சி 03ஆம் பக்கம்...)




















































# ஹரித்வார் – முக்தி தரும் புண்ணிய பூமி

ஹரித்வார் இந்தியாவின் தேவ பூமி என்று அழைக்கப்படும் உத்தரகாண்ட் மாநிலத்தில் அதாவது டெல்லியில் இருந்து 225 கிமீ தொலைவில் உள்ள இந்துக்களின் புனித நகரமாகும். இந்த நகரம் முக்தி தரும் ஏழு புனித நகரங்களில் (காசி, அயோத்தி, காஞ்சிபுரம், மதுரா, துவாரகை, உஜ்ஜைன் மற்றும் ஹரித்வார்) ஒன்றாகக் கருதப்படு கின்றது. இங்கு கங்கையில் புனித நீரில் நீராடினால் முக்தி கிடைக்கும் என்பது நம்பிக்கை. ஏகாதசி, பௌர்ணமி, அமாவாசை, சங்கராந்தி மற்றும் கிரகண காலங்களில் பிரம்மகுண்டத்தில் புனித நீராடுதல் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. சமஸ்கிருதத்தில் ஹரி என்றால் 'விஷ்ணு' என்றும் துவார் என்றால் 'நுழைவாயில்' என்றும் பொருள். எனவே, ஹரி-துவார் என்றால் விஷ்ணுவை காணச் செல்லும் நுழைவாயில் என்று மொழி பெயர்க்கின்றனர். ஏனெனில் பொதுவாக பகவான் விஷ்ணுவின் இருப்பிடமான பத்ரிநாத் பயணத்தை இங்கு இருந்துதான் தொடங்குவர்.

புராணத்தின்படி, தேவர்கள் உலகில் இருந்த கங்கையை ராஜா பகீரதன் தனது தவப்பலத்தின் காரணமாக சிவபெருமானின் தலைமுடி சடையின் வழியாகக் கங்கை நதியை பூலோகத்தில் இறக்கியது ஹரித்வாரில்தான். மேலும் கங்கை நதி கங்கோத்ரி பனிப்பாறையான கோமுக்கில் உருவாகி பகீரதி என்ற பெயருடன் இமய மலையில் இருபுறமும் மலைத் தொடர் களுக்கு நடுவே 250 கிமீ ஓடிய பின்னர் தேவ்பிரயாக் என்னும் இடத்தில் பத்ரிநாத் வழியாக வரும் அலக்நந்தா நதியுடன் சங்கமமாகிப் பின்னர் கங்கை என்ற பெயருடன் முதன் முறையாக சமவெளியில் நுழையும் இடமும் ஹரித்வார்தான்.

ஹரித்வாரில் எண்ணற்ற ஆலயங்கள் உள்ளன. அவற்றில் பஞ்ச தீர்த்தம் என்று அழைக்கப்படும் ஐந்து கோவில்களை ஹரித்வாரில் தரிசனம் செய்வது மிகவும் அவசியம். அந்த ஆலயங்களைப்பற்றிய விவரங்கள் யாதெனில் (1) ஹரி-கி-பௌரி - இது கங்கைக் கரையில் உள்ள மிகவும் முக்கியமான படித்துறையாகும். மேலும் இந்த இடத்தில் விஷ்ணுவின் (ஹரி-கி) பாதம் (பௌரி) பட்டதாகவும் நம்பப்படு கின்றது. இந்தப் படித்துறைக்குப் பிரம குண்டம் என்ற பெயரும் உண்டு. பாற் கடலில் இருந்து எடுத்த அமிர்தத்தில் மீதமிருந்ததை அசுரர்களுக்கு கிடைக்கா மல் இருக்க மோகினி வடிவில் வந்த மஹாவிஷ்ணு இங்கு வந்து கொட்டியதாகப் புராணம் சொல்கின்றது. ஆகையால்தான் இங்கே புனித நீராடுவதனால் பாவங்கள் நீங்கிப் பல மடங்கு புண்ணியத்தைப் பெற்று மோட்ச பதவியைப் பெறுவர் என்று நம்பப்படுகின்றது. இங்கு இருந்து எடுக்கப்படும் கங்கா தீர்த்தம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். காரணம் இந்தத் தீர்த்தம் எத்தனை ஆண்டுகள் ஆனாலும் கெடுவதில்லை. இங்கு ஒவ்வொரு மாலையும் சூரிய அஸ்தமனத்துக்குப் பிறகு கங்கா தேவிக்குத் தீப ஆராதனை செய்யப் படுகின்றது. (2) மாயா தேவி - இந்த ஆலயம் 51 சக்தி பீடங்களில் முதல் சக்தி பீடமாகும். கணவனின் நீண்ட ஆயுளுக்காக இந்த ஆலயத்தை சுமங்கலிகளால் போற்றப்படுகிறது. இந்த தேவியை மதிக்கும் விதமாக ஹரித்வாருக்கு மாயாபுரி என்ற பெயரும் உண்டு. (3) மான்சா தேவி - சக்தியின் வடிவமான இந்த தேவியை பக்தியுடன் தரிசித்தால் பக்தர்கள் எண்ணியவை அனைத்தும் அவ்விதமே கூடும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இந்த ஆலயம் இமயமலையின் தெற்கு மலைச் சங்கிலியான சிவாலிக் மலைகளில் உள்ள பில்வா குன்றின் உச்சியில் அமைந்துள்ளது. (4) சண்டி தேவி - இந்த ஆலயம் சிவாலிக் மலையில் கிழக்கு உச்சியில் உள்ள நீல் குன்றின் மேல் 8 ஆம் நூற்றாண்டில் ஆதி சங்கராச்சாரி யாரால் நிறுவப்பட்டதாகும். (5) தக்ஷேவர் மகாதேவ் கோயில் - இந்த ஆலயம் சிவபெருமானுக்கு அர்ப்பணிக்கப்பட்ட தாகும். புராணங்களில் குறிப்பிட்டுள்ளபடி, சிவனின் முதல் மனைவியான தாட்சாயணி யின் தந்தை ராஜா தட்சன் சிவனை அழைக்காமல் இங்கு யாகம் நடத்திய காரணத்தால் சினம் கொண்ட தாட்சாயணி யாகக் குண்டத்தில் விழுந்து தன்னைத் தானே மாய்த்துக் கொண்டாள். இதனால் துக்கத்தில் மூழ்கியிருந்த சிவன் தாட்சாயணியின் இறந்த உடலை எடுத்துத் தாண்டவ நடனம் ஆடத்தொடங்கினார். இதனால் ஏற்படும் அழிவைத் தடுக்க, விஷ்ணு தனது சுதர்ஷன் சக்கரத்தால் தாட்சாயணியின் இறந்த உடலை 51 பாகங்களாக பிரித்தார். அந்த உடலின் பாகங்கள் இந்திய துணைக் கண்டத்தின் பல்வேறு இடங்களில் விழுந்தது. அந்த இடங்களில் எல்லாம் தாட்சாயணிக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் 51 சக்தி பீடங்களாக வணங்கப்படுகின்றது.



ஹரித்வாருக்கு டெல்லியிலிருந்து விமானம், ரயில் மற்றும் வாகனம் மூலமாக செல்லலாம். ஹரித்வாரைச் சுற்றிப் பார்ப்பதற்கு ஒரு நாள் போதுமானது. இங்கு தங்குவதற்கு ஹோட்டல்கள் மற்றும் எண்ணற்ற ஆசிரமங்கள் உள்ளன. ஹரித்வாரைச் சுற்றிப்பார்க்க மழை காலங் களான ஜுன் மற்றும் ஜுலை மாதங்களை தவிர மற்ற எல்லா மாதங்களும் உகந்த தாகும். ஹரித்வாரில் இருந்து 25 கிமீ தொலைவில் உள்ள உலகின் யோகா தலைமையகமாக விளங்கும் ரிஷிகேஷை யும் காணவேண்டும். அதைப்பற்றிய விபரங்கள் அடுத்த தொடரில் காணலாம்.



செல்வராஜ், டெல்லி
www.tamilcartrip.com
WhatsApp: +91.986.816.5715




# இலங்கை...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

ராஜபக்ச, இலங்கை அரசியல் சாசனத்தில் திருத்தங்களைச் செய்ய வசதியாகத் தனது கட்சிக்கும் அதன் ஆதரவுக் கட்சி களும் நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றிலி ரண்டு பெரும்பான்மையை இத்தேர்தல் பெற்றுத்தரும் என எதிர்பார்க்கிறார்.

2015 ஒகஸ்ற் 17ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 15 மில்லியன் வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டிருந்த னர். அவர்களில் 77.7%ஆனோர் தமது வாக்குகளை அளித்திருந்தனர். இலங்கை நாடாளுமன்றத்தில் உள்ள 225 ஆசனங்களில், ஐக்கிய தேசியக் கட்சியும் மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட சில கட்சிகள் சேர்ந்து உருவான UNF (United National Front) என அழைக்கப்பட்ட ஐக்கிய தேசிய முன்னணி 106 ஆசனங்களைப் பெற்றது.

அத்தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் உட்பட 10இற்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகள் கொண்ட UPFA (United People's Freedom Alliance) எனப்படும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 95 ஆசனங் களைப் பெற்றது. இவற்றைவிட TNA (Tamil National Alliance) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 16 ஆசனங்களையும் ஜனதா விமுக்தி பெரமுன 6 ஆசனங்களையும் ஏனைய இரு கட்சிகள் தலா ஒரு ஆசனத்தையும் பெற்றிருந்தன.

நாட்டை ஆளுவதற்கு வேண்டிய அறுதிப் பெரும்பான்மைக்கு தேவையான 113 ஆசனங்களை எந்த ஒரு கட்சியும் பெற்றி ராதபடியால் அதிகூடிய ஆசனங்களைப் (106) பெற்ற UNF தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் UNFGG (United National Front for Good Governance) நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி என்ற பெயரில் நாட்டை ஆட்சி செய்தனர்.


Candidates from the Tamil Nation Alliance (TNA)

2020 ஒகஸ்ற் 5ஆம் திகதி நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்க 16 மில்லியனுக்கு மேற்பட்ட வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் 70 இருந்தாலும் அவற்றில் பல கட்சிகள் கூட்டு சேர்ந்தே தேர்தலில் போட்டியிடுகின்றன. 313 சுயேட்சை வேட்பாளர்களைக் கொண்ட குழுக்களும் இத்தேர்தலில் போட்டியிடுகின் றன. இம்முறை நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடக் கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்கள் 3,652 பேரும் சுயேட்சைக் குழுவைச் சேர்ந்த வேட்பாளர்கள் 3,800பேருமாக மொத்தமாக 7,452 பேர் பதிவு செய்துள்ளனர்.

இலங்கை நாடாளுமன்றத்தில் 225 உறுப்பினர்கள் இருந்தாலும் அவர்களில் 196 பேர் நாடு முழுவதிலும் உள்ள 22 தேர்தல் மாவட்டங்களில் இருந்து விகிதா சார முறைப்படியும் மிகுதி 29 பேர் நாடு முழுவதும் கட்சிகள் பெற்ற மொத்தவாக்கு களின் விகிதாசார முறைப்படியும் தெரிவுசெய்யப்படுவர்.

இலங்கையின் அரசியல் நிர்வாகத்திற்காக நாடு 25 மாவட்டங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. ஆனால் பல தமிழ் மாவட்டங்களில் சனத்தொகை குறைவாக இருப்பதால் தேர்தலுக்காக நாடு 22 மாவட்டங்களாகக் கருதப்படுகிறது. வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மூன்று அரசியல் நிர்வாக மாவட்டங்களைச் சேர்த்து ஒரு வன்னித் தேர்தல் மாவட்டமாக அமைக்கப்பட்டுள் ளது. இதேபோல் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி அரசியல் நிர்வாக மாவட்டங்கள் இரண்டையும் சேர்த்து ஒரு யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டமாக அமைக்கப்பட்டுள்ளது.

வன்னித் தேர்தல் மாவட்டம் 3 அரசியல் மாவட்டங்களை உள்ளடக்கி இருந்தாலும் அதுவே இலங்கையில் அதி குறைந்த பதியப்பட்ட வாக்காளர்களக் கொண்ட தேர்தல் மாவட்டமாகும். இங்கு பதியப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 287,024. அடுத்த குறைவான பதியப்பட்ட வாக் காளர்களைக் கொண்டது திருகோணமலை மாவட்டமாகும். திருகோணமலை மாவட்டத்தில் பதியப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 288,868 ஆகும்.

இலங்கையிலேயே அதி கூடிய பதியப்பட்ட வாக்காளர்களைக் கொண்ட மாவட்டமாகக் கம்பஹா மாவட்டம் இருக்கிறது.

(தொடர்ச்சி 09ஆம் பக்கம்...)

# நாமும் நமது இல்லமும் 561

## கோவிட்-19 ஏற்படுத்தும் புதிய அணுகுமுறையிலான தொழில்முறை



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

கனேடிய மத்திய வங்கியின் புதிய ஆளுனராக திரு. ரிவ் மக்லெம் (Tiff Macklem) ஜூன் 03, 2020இல் பதவியேற்றுள்ளார். கனேடியப் பொருளாதாரம் மட்டுமல்லாமல் உலகப் பொருளாதாரமும் நெருக்கடியான நிலையில் உள்ள போது இவர் இப்பதவியை ஏற்றுள்ளார். இந்த நிலைமையில் எவ்வாறு தனது கடமைகளைச் செயலாற்றுவார் என்பது மிகவும் முக்கியமானது.

ஏற்கனவே இருந்த ஆளுனர்கள் இக்கட்டான நிலைமைகளில் மிகவும் சிறப்பாகச் செயலாற்றியுள்ளனர். குறிப்பாக இவரிற்கு முந்திய ஆளுனர்களான திரு. மார்க் கார்னி மற்றும், திரு. ஸ்ரீவன் போலஸ் ஆகியோர் அண்மைக் காலங்களில் மிகச் சிறப்பாக செயலாற்றி கனேடியப் பொருளாதாரத்தை சிறப்புற செய்ததோடு மட்டுமல்லாமல், 2008/2009 இல் ஏற்பட்ட உலக பொருளாதார நெருக்கடியிலிருந்து கனடாவின் பொருளாதாரத்தை மிகவும் சாதுரியமாக கையாண்டார் அன்றைய ஆளுனர் திரு. மார்க் கார்னி.

கோவிட்-19 நிலைமையால் உலகப் பொருளாதாரம் முடக்கப்பட்டுள்ள நிலையில் முன்னைய ஆளுனர் ஸ்ரீவன் போலஸ் முதன்மை வட்டி வீதத்தை 0.25%ஆகக் குறைத்தார். இந்த வட்டி வீதமே இப்பொழுது காணப்படுகிறது. திரு. ரிவ் மக்லெம் தனது முதலாவது





பத்திரிகையாளர்களின் கேள்வி நேரத்தில் பொருளாதாரத்தின் நிலைப்பாடு மிகவும் இறுக்கமாக உள்ளதாக தெரிவித்துள்ளார். ஏற்கனவே மிகக் குறைந்த நிலையிலுள்ள கனேடிய முதன்மை வட்டி வீதத்தை மேலும் கீழே இறக்கும் நோக்கம் உடனடியாக இல்லை எனக் கூறிய போதிலும், பொருளாதார வளர்ச்சிக்கு வேறு வழிகளை ஆராய்வதாகவும் கூறியுள்ளார் ஜூன் 03, 2020இல் பொறுப்பேற்ற இவரின் முதலாவது கனேடிய மத்திய வங்கியின் முதன்மை வட்டி வீதத்தை பற்றிய சந்திப்பு ஜூலை 15இல் நடைபெறவுள்ளது. எவ்விதமான பொருளாதார வளர்ச்சிக்கான அறிக்கையை இவர் வெளியிடுவார் என்று அன்றே தெரியவரும்.

கோவிட்-19இன் தாக்கம் பற்றிய உண்மைகளை அறிவதற்குக் காலம் எடுக்கும். இதற்கு முந்திய 1989 மற்றும் 2008/2009 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளின் எதிர்காலம் பற்றி அன்றைய நிலைமையில் ஓரளவு எதிர்வு கூறக்கூடியதாக இருந்தது. 2008/2009இற்குப் பின்னர் ஆதன வியாபாரத்தில் மிகப்பெரிய விலையேற்றம் ஏற்பட்டதனைக் காணக்கூடியதாக இருந்தது. பொதுவாக பொருளாதார சுருக்கத்திற்குப் பின்னர் ஆதன வியாபாரத்தில் சிறப்பான எதிர்காலம் ஏற்படுவதாகவே முன்னைய புள்ளி விபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. ஆனால் பொருளாதார சுருக்கம் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதை எதிர்வு கூறுவது நெருக்கடியான, இயல்பானதாக இருக்காது. உதாரணமாக 1989இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியில் இருந்து வெளிவர ஏறக்குறைய ஒன்பது வருடங்கள் எடுத்தது. 2008/2009இன் பொருளாதார நெருக்கடி இரு வருடங்களில் நிலைமை மாறியது. ஆனால் கோவிட்-19இன் நிலைமை முற்றிலும் வித்தியாசமானது.

இந்த ஆண்டு கோவிட்-19இன் முக்கிய பாதிப்பான மாதங்களான ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் ஆதன வியாபாரத்தில் பாதிப்பு ஏற்பட்டது. எனினும் ஒவ்வொரு மாதமும் முன்னைய மாதங்களைவிட முன்னேற்றமான மாதங்களாகவே காணப்படுகிறது. ஒவ்வொரு மாதங்களும் ஆதன வியாபாரம் ஏறுமுகமாகவே காணப்படுகிறது. ஆனால் இந்தக் காலப்பகுதியில் மத்திய வங்கியின் வட்டி வீதம் கீழ்முகமாகவே வந்துள்ளது. இன்று சில நிதி நிறுவனங்கள் வீட்டு அடமானக் கடனுக்கு ஐந்து (5) வருடத்திற்குரிய மாறாத வட்டி வீதத்தை 1.99%இற்கு வழங்கி வருகின்றன.

ஸ்காபரோ, மிசிசாகா போன்ற பகுதிகளில் பல வாங்குவோர் ஓர் ஆதனத்திற்காகப் போட்டி போடுவதனைக் காணக்கூடியதாக இருந்தது. 2020 யூன் மாதத்தின் மூன்றாவது கிழமையில் ஒரு வீட்டிற்கு 42 வாங்குவோர் போட்டி போட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. இன்றைய நிலையில் இது ஒரு சாதாரணமான நிகழ்வாகக் காணப்படுகிறது. எனினும் சில பகுதிகளில் ஆதனங்களை வியாபாரம் செய்வதில் இறுக்க நிலை காணப்படுகின்றது. பொதுவாகக் கூறுவதானால், ரொறொன்ரோவின் பெரும்பாகத்தின் குறிப்பிட்ட பகுதிகளில் நிலமை ஆரோக்கியமாகக் காணப்படுகிறது. செப்ரெம்பரிற்குப் பின்பாகத்தான் உண்மையான நிலமை தெரியவரும்.

ஆனால், இன்றைய காலத்தில் சில பகுதிகளில் வாடகைக்கு கொடுப்பது இதற்கு முற்றிலும் மாறாகக் காணப்படுகிறது. குறிப்பாக ரொறொன்ரோவின் மத்திய பகுதியில் வாடகைக்கு கொடுப்பது மிகவும் இக்கட்டான நிலைமையிலுள்ளது. அடுக்குமாடி மனைகளில் குடியிருந்த பலரும் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி விட்டனர். இதனால் அதிகமான இருப்பிடங்கள் வெற்றிடமாக வாடிக்கையாளர்களை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றன. ரொறொன்ரோவின் மத்திய பகுதியில் தொழில் புரிந்தோர்களில் பலர் ரொறொன்ரோவிற்கு





வெளியே தொலைவில் வீட்டிலிருந்து, குறிப்பாக பெற்றோருடன் இருந்து தொழில் புரிகின்றனர். இதனையே அவர்களின் நிறுவனங்களும் ஊக்குவிக்கின்றன. இதன் பாதிப்புகள் எவ்வாறு இருக்கும் என்பது உடனடியாக எதிர்வு கூறுவது கடினம்.

எனினும் அலுவலகத்துக்குச் சென்றுதான் தொழில் புரிய வேண்டும் என்ற நிலைமை மாறியதில் ஏற்பட்ட மாற்றம், தொழில் புரியும் முறையில் புதியதொரு பாதையைச் சமைத்துள்ளது. இதுவும் ஒரு புதிய வரலாற்று மாற்றம். இந்நிலைமை தொடரும்போலவே தெரியவருகின்றது.

அத்துடன் குறைந்த கால வாடகை முறையை நடத்திவந்த Airbnb என்ற நிறுவனமும் தமது தொழில் முறையை மாற்றியுள்ளது.

இவ்வாறான சடுதியான மாற்றம் ஆதன வியாபாரத்தில் எவ்விதமான தாக்கங்களை ஏற்படுத்தும் என்பது சிறிது சிறிதாகத் தெரியவரும். நல்லதையே எதிபார்ப்போம்.

ALL LINK TRAVEL INC.
SPECIALIZE IN DESTINATION, EUROPE TOURS AND CRUISES ALL OVER THE WORLD.
WE MATCH AND BEAT ALL INTERNET PRICES





கட்டணங்கள் நிபந்தனைக்கு உட்பட்டவை
ALL INCLUSIVE CHEAPEST TOUR PACKAGE TO:
DOMICAN REPUBLIC: $850
MEXICO: $815
CUBA: $585
July, August & September
COLOMBO: $1150
CHENNAI: $1100
BENGALOORU: $1130
LONDON: $680
PARIS: $895
GERMANY: $695
வேறு எந்த விமான பிரயாணச்சீட்டு முகவர்களிடமும் கிடைக்காத மிகவும் குறைந்த கட்டணம்!!
• Scarborough • Ajax • Brampton • Mississauga • Etobicoke
3300 McNicoll Ave. Scarborough, ON, M1V 5J6
CONTACT SUTHA: 416 293 8700

யோகா சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
பலன் பார்த்தல் சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# வடமாகாணக் கல்வி நிலையை மேம்படுத்துவதற்கான சில பின்னணிகளும் ஆலோசனைகளும்

ந. அனந்தராஜ், B.A.(Hons.) - M.A
Dip-In-Edu.,Dip-In-Journalism, SLPS, SLEAS

## பகுதி–3

அதிபர் ஆசிரியர்களின் பொருத்தமற்ற இடமாற்றங்கள் ஆசிரியர்களின் நியமனங்களில் எவ்வாறான குறைபாடுகள் காணப்படுகின்றனவோ அதேபோன்று திட்டமிடப்படாத வகையில் இடம்பெறும் அதிபர்களினதும், ஆசிரியர்களினதும் இடமாற்றங்களும் பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகளைப் பாதிப்பதாக பெற்றோர்களும், ஆசிரியர்களும் குறைப்பட்டுக் கொள்கின்றனர். வடமாகாணத்திற்கென அங்கீகரிக்கப்பட்ட 'ஆசிரியர் இடமாற்றக் கொள்கை' உள்ளபோதும், அதற்கமைய இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதில்லை என பெரும்பாலான ஆசிரியர்கள் குறைபட்டுக்கொள்கின்றனர். அதனால் மாணவர்களின் கல்வி ஒழுங்கு முறைமைகள் பாதிக்கப்படுவதுடன், பாடவிதானங் களை உரிய காலத்திற்குள் பூர்த்தி செய்ய முடியாதும் போகின்றது.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் ஆசிரியர் நியமனங்கள், அவர்களுக்கான பாடசாலைகளின் ஒதுக்கீடுகள், பதவி உயர்வுகள், நிதிப் பங்கீடுகள் என்பவற்றில் அரசியல் தலையீடுகள் அதிகரிக்கப்பட்ட பின்னரே வடக்கு கிழக்கின் கல்வித்தரமும், பாடசாலைகளின் கட்டுக் கோப்புகளும் சீர்குலைந்தன என்பதைப் பல தரப்பினரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வடமாகாணத்தின் கிளிநொச்சி, முல்லைத் தீவு, துணுக்காய், மடு, தீவகம் ஆகிய வலயங்களில் போதியளவு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்ட போதிலும் பேருந்து வசதியுள்ள பிரதான பாதைகளின் இரு மருங்கிலும் உள்ள பாடசாலைகளில் தேவைக்கு மேலதிகமாகவும், பிரதான பாதையில் இருந்து சுமார் 4 கிலோ மீற்றருக்கு உட்புறமாக உள்ள பின்தங்கிய பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக் குறையும் காணப்படுகின்றது. இதில் அரசியல்வாதிகளினதும், சில தொழிற்சங்கங்களின் தலையீடுகளும் மாகாணக் கல்வித் திணைக்களங்கள், வலயக்கல்விப் பணிமனைகளின் சுயாதீனமான செயற்பாட்டிற்குத் தடையாக இருப்பதாகச் சில கல்வி அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர்.

ஆயினும் இத்தகைய இடமாற்றங்கள் வருட ஆரம்பத்தில் மேற்கொள்ளப்படுவதன் மூலமும், ஓர் அதிபர் அல்லது ஆசிரியர் எவரேனும் ஓய்வு பெறும் நாள் ஏற்கனவே அறிந்தது என்ற வகையில் ஒருவர் இளைப்பாறுவதற்கு குறைந்தது ஒரு வாரத்திற்கு முன்னரே அந்தப் பாடசாலைகளுக்கான அதிபர்கள் அல்லது ஆசிரியர்களை நியமிப்பதன் மூலம், பாடசாலை நிர்வாகத்தின் வினைத்திறன் மிக்க தொடர்ச்சியைப் பேணமுடியும். சில பாடசாலைகளில் அதிபர்கள் ஓய்வு பெற்று ஐந்து அல்லது ஆறு மாதங்கள் கடந்த நிலையிலும் அப்பாடசாலைகளுக்கு அதிபர்கள் நியமிக்கப்படாது இருப்பதால், பாடசாலைகளில் பல்வேறு நிர்வாகச் சிக்கல்களும், ஆசிரியர்களிடையே முரண்பாடுகளும் அதிகரிக்கப்படுவதுடன், இடைக்காலத்தில் சில காலங்கள் அதிபராகக் கடமையாற்றியவர்களால் பின்னர் புதிதாக நியமனம் பெற்றுவரும் நிரந்தர அதிபர் பல சவால்களைச் சந்திக்கின்றநிலை காணப்படுகின்றது. பாடசாலைகளின் கல்வித் தரவீழ்ச்சிக்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்து விடுகின்றது.

### ஆசிரியர்களின் பாட முன்னாயத்த நிலை:

தற்போதைய கல்வி முறையின் கீழ் செயற்பாடு சார்ந்த கல்விக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. அவற்றை ஒட்டியதாகவே பொதுப் பரீட்சை வினாத் தாள்களும் அமைகின்றன. ஆனால், இன்று இலங்கையில் உள்ள பெரும்பாலான பாடசாலைகளில் கற்றல், கற்பித்தலுக்கான பாட முன்னாயத்தங்களுடன் வகுப்பறைகளுக்குச் செல்லும் ஆசிரியர்கள் மிகக் குறைவாகவே காணப்படுவதைப் பாடசாலை மேற்பார்வை அறிக்கைகள் காட்டுகின்றன. பொதுவாக அகராதிகள், கலைக்களஞ்சியங்கள், கல்வி அறிக்கைகள், மத்தியவங்கி அறிக்கைகள், புள்ளிவிபரத் திணைக் களத்தின் அறிக்கைகள் போன்ற தகவல் திரட்டுக்களையும், கற்றலுக்கு உதவும் துணை நூல்களையும், கற்பித்தல் சாதனங்களையும் கற்றல், கற்பித்தலில் பயன்படுத்துவது குறைவாக இருத்தல்.

மேலும் பாடசாலைகளின் கற்றல் செயற்பாட்டில் தொலைக்காட்சி, வானொலி, கட்புல, செவிப்புல சாதனங்கள் மற்றும் மேன்தலைஎறியி, பல்லூடகஎறியி (Multi Media Projector) கணினிகள், இணையத்தள வசதிகள் போன்ற நவீன கற்றல் சாதனங்கள் போதியளவில் இருந்த போதும், கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டில் அவற்றைப் பயன்படுத்துவதும் குறைவாகவே இருக்கின்றது. அதேபோன்று பாடசாலைகளில் உள்ள விஞ்ஞான ஆய்வுகூடம் மற்றும் நூலகக் கற்றல்வள நிலையங்கள் என்பன ஆசிரியர்களினாலும், மாணவர்களினாலும் முறையாகப் பயன்படுத்தாமையும் பாடசாலை மேற்பார்வை அறிக்கைகள் சுட்டிக்காட்டியுள்ளன.

கீழே தரப்பட்டுள்ள அட்டவணை இல. 02 இல் காட்டப்பட்டபடி வடமாகாணத்தின் இறுதிக்கால யுத்தத்தின் பாதிப்பை 2009, 2010, 2011 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் வீதங்கள் புலப்படுத்துகின்றன. ஆனால் அதனை அடுத்து வந்த 2012, 2013 ஆகிய ஆண்டுகளைத் தொடர்ந்து 2019இல் கல்விப் பெறுபேற்றில் அதிகரிப்பு ஏற்பட்டதைக் காட்டுகின்றது. இப்புள்ளிவிபரங்களினூடாக வடமாகாணம் கல்வி அபிவிருத்தி அடைவு மட்டத்தில் எந்த நிலையில் உள்ளது என்பதையும், இதற்கான காரணங்களையும் அறிந்து அவற்றில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்தலாம்:.

### அட்டவணை : 02

**• க.பொ.த. (சா/த) –2009 தொடக்கம் 2019வரை இடம்பெற்ற பரீட்சைகளில் மாகாணங்களின் பெறுபேற்று வீதம்**

| மாகாணம் | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வடக்கு | 55.7 | 56.9 | 54.3 | 60.0 | 65.3 | 64.19 | 60.38 | 60.66 | 66.12 | 69.99 | 67.74 |
| கிழக்கு | 47.5 | 59.4 | 56.4 | 62.2 | 65.4 | 66.71 | 63.54 | 61.56 | 67.76 | 69.97 | 70.25 |
| வடமத்தி | 42.5 | 54.8 | 56.1 | 60.4 | 63.1 | 65.3 | 66.6 | 66.3 | 70.0 | 72.8 | 71.3 |
| மேல் | 60.9 | 67.3 | 66.6 | 69.0 | 69.4 | 72.0 | 72.7 | 72.9 | 74.6 | 76.7 | 78.0 |
| வடமேல் | 53.5 | 62.7 | 62.7 | 66.8 | 68.9 | 70.4 | 69.7 | 70.6 | 74.6 | 77.0 | 75.3 |
| மத்திய | 48.5 | 56.5 | 57.6 | 61.5 | 63.5 | 66.0 | 67.0 | 68.9 | 71.4 | 72.4 | 70.9 |
| ஊவா | 43.8 | 52.6 | 54.5 | 59.6 | 63.4 | 64.8 | 65.9 | 68.1 | 69.7 | 72.4 | 70.2 |
| சப்ரகமுவ | 50.3 | 59.4 | 60.4 | 64.3 | 66.6 | 68.3 | 70.0 | 70.8 | 74.3 | 76.2 | 75.0 |
| தெற்கு | 53.1 | 60.3 | 62.9 | 66.3 | 67.1 | 73.1 | 75.2 | 76.7 | 79.4 | 80.4 | 78.3 |
| தேசிய நிலை | 52.6 | 60.6 | 60.8 | 64.7 | 66.7 | 69.0 | 69.02 | 69.94 | 73.05 | 75.09 | 73.84 |

இது தொடர்பாக அடிப்படைக்கல்வி அலகினால் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வில் கற்றல் உபகரணங்களைப் பயன்படுத்தும் ஆசிரியர்கள் 28% ஆகவும், பாடக்குறிப்பு, வேலைத்திட்டங் களுடன் வகுப்பிற்குச் செல்வோர் 46% ஆகவும் மாணவர்களின் குறிப்புக் கொப்பிகளைப் பார்வையிட்டுத் திருத்துவோர் 30% என்ற வகையிலும் புள்ளிவிபரங்களைப் பார்க்கும் பொழுது, ஆசிரியர்கள் மேலும் அதிக முயற்சிகளை எடுக்க வேண்டும் என்பது புலப்படுகின்றது.

2009ஆம் ஆண்டுவரை அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வன்னி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களுக்கான கற்றல் உபகரணங்கள் எடுத்துச் செல்வதற்கான தடைகள் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து புதிய ஆசிரியர் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டமை, உலக வங்கியின் அபிவிருத்தித் திட்டங்களின் மூலம் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டமையினாலும் ஆசிரியர்களும் மாணவர்களும் கற்றல் கற்பித்தலில் ஈடுபாடு காட்டத் தொடங்கினர்.

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)



# தேர்தல் களத்தில் பேசுபொருளாகியுள்ள 'கருணா அம்மான்'




விடுதலைப்புலிகள் அமைப்பின் கிழக்கு மாகாணத் தளபதியாக இருந்து, பின்னர் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து அரசியல்வாதியாக மாறியுள்ள கருணா அம்மான் என்றழைக்கப்படும் விநாயக மூர்த்தி முரளிதரன் அண்மையில் கூறிய சர்ச்சைக்குரிய விடயம் தெற்கு அரசியலில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

கிழக்கில் மக்கள் சந்திப்பு ஒன்றில் அவர் உரையாற்றும்போது, ஆனையிறவில் இரண்டாயிரம் - மூவாயிரம் படையினரை தான் கொன்றதாகக் குறிப்பிட்டார். இதற்குப் பல்வேறு தரப்பினரும் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர். இது கோத்தபாய அரசாங்கத்திற்கு சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

எதிர்வரும் யூலை மாதம் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அரசியல் கட்சிகள் தேர்தல் பரப்புரைகளில் தீவிரம் காட்டி வருகின்றன. கருணா கூறிய விடயத்தை எதிர்க்கட்சிகள் ஆளும் பொதுஜன பெரமுன கட்சிக்கு எதிராக ஆயுதமாகப் பயன்படுத்தி வருகின்றன. கருணாவை கைது செய்ய வேண்டும் என்ற கோரிக்கையும் எதிர்கட்சிகளால் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கருணாவிடம் வாக்குமூலமும் பெற்றுள்ளது. கருணா இது தொடர்பில் பெரிதாக அலட்டிக்கொண்டதாகத் தெரியவில்லை. அவர் இப்போது தொடர்ந்து பல ஊடகங்களுக்குப் பேட்டியளித்து வருகின்றார். தான் சுமார் இரண்டு மணி நேரம் மக்கள் மத்தியில் மேற்கொண்ட உரையில் இரண்டு நிமிடங்கள் குறிப்பிட்ட ஒரு விடயத்தை எதிர்க்கட்சிகள் ஊதிப் பெருப்பித்து வருவதாக அவர் கூறுகின்றார். ஆனையிறவில் ஆயிரக்கணக்கான இராணுவத்தை நான் கொன்றேன் என்று கூறவில்லை நாங்கள் என்றுதான் குறிப்பிட்டேன் என்று அவர் கூறுகின்றார். அது ஒரு தேர்தல் பிரச்சாரத்திற்காக சொல்லப்பட்ட விடயம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, போர் நடைபெற்ற காலங்களில் தான் விடுதலைப்புலிகளின் தளபதியாக இருந்தபோது, நடைபெற்ற விடயங்கள் எல்லோருக்கும் தெரியும். அதில் மறைப்பதற்கு எதுவுமில்லை என்றும் பின்னர் விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து தான் விலகி ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொண்டதாகவும், இப்போது தன்னை கைது செய்ய வேண்டும் என்று கூறுவோர் இதனை வைத்து அரசியல் இலாபமடைய முயல்கின்றனர் எனவும் அவர் தெரிவிக்கின்றார்.

கருணா கூறிய விடயத்தை தேர்தல் பரப்புரை மேடைகளில் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினர் அதிகளவில் பேசி வருகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி போன்ற கட்சிகளும் கண்டன கருத்துக்களை முன்வைத்து வருகின்றன.

ஆயிரக்கணக்கான படையினரையும், கிழக்கில் நூற்றுக் கணக்கான பொலிஸ் உத்தியோகத்தர்களையும் கொலை செய்த குற்றவாளியான கருணாவை கோத்தபாய அரசாங்கம் செல்லப்பிள்ளையாக வைத்திருப்பதாகவும் சிங்கள மக்கள் மத்தியில் எதிர்தரப்பினர் கடுமையாகப் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

கருணா படையினரை தான் கொலை செய்ததாகக் கூறிய விடயமும், அதனை முன்வைத்து எதிர்கட்சிகள் தெரிவித்து வரும் கருத்துக்களும் சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் குழப்பத்தையும், கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளதாக தென்னிலங்கையிலுள்ள ஊடகத்துறை சார்ந்த சிலர் தெரிவிக்கின்றனர்.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் கோத்தபாய அரசாங்கம் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தைப்பெற வேண்டும் என்கின்ற இலக்கில் நகர்ந்து கொண்டிருக்கையில், கருணாவை முன்னிறுத்தி எதிர்கட்சிகள் சிங்கள மக்கள் மத்தியில் மேற்கொண்டு வரும் பரப்புரை சிக்கலை ஏற்படுத்தியுள்ளது என்பது உண்மைதான். இது தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஸவோ, கோத்தபாய ராஜபக்ஸவோ கருணாவை கண்டித்ததாக செய்திகள் வெளிவரவில்லை. ஆனால், தனிப்பட்ட வகையில் கருணாவுடன் தொடர்பு கொண்டு அவர்கள் கண்டித்திருக்கலாம்.

கருணா தற்போது ஊடகங்களுக்கு அளித்துவரும் பேட்டிகளில் மேலும் பல விடயங்களை வெளிப்படுத்தி வருகின்றார்.

இந்திய இராணுவம் இலங்கையில் நிலைகொண்டிருந்த காலத்தில் இலங்கையின் ஜனாதிபதியாக இருந்த ஆர்.பிரேமதாச விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கியதாகவும், தன்னைக் கைது செய்ய வேண்டும் - விசாரணை செய்ய வேண்டும் என்றால் இது தொடர்பிலும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும், சஜித் பிரேமதாச தனது தந்தையாரின் இந்த செயல் தொடர்பில் பதில் சொல்ல வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



எதிர்த் தரப்பினருக்கு ஆதரவாக செயற்படும் தமிழ் அரசியல்வாதிகள் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டிருந்தனர் எனவும், விடுதலைப்புலிகளின் 'பொங்கு தமிழ்' மேடைகளில் தமிழீழமே ஒரே தீர்வு என அவர்கள் முழங்கிய காணொளி ஆதாரங்கள் தன்னிடம் உள்ளதாகவும், தன் மீதான விமர்சனங்களை அவர்கள் மேற்கொண்டால் தன்னிடமுள்ள ஆதாரங்களை வெளிப்படுத்த வேண்டிவரும் எனவும் கருணா மிரட்டி வருகின்றார். கருணா குறிப்பிடும் பிரேமதாச விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கிய விவகாரம் இப்போதுதான் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒரு விவகாரம் அல்ல. அது முன்னரே அக்காலங்களில் பகிரங்கமாக தெரியவந்த விடயம்தான். இந்திய இராணுவத்துடன் போர்புரிய அந்த ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்பட்டன. அக்காலங்களில், விடுதலைப்புலிகள் இதனை தமிழ் மக்கள் மத்தியில் பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

இந்திய இராணுவத்தை நாட்டிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்கின்ற தீர்மானம் விடுதலைப்புலிகளுக்கு இருந்தது. அதேபோல, பிரேமதாச அரசாங்கத்திற்கும் இருந்தது. இந்நிலையில், விடுதலைப்புலிகளை ஒரு கருவியாகவே பிரேமதாச பயன்படுத்தினார். அக்காலகட்டத்தில் தென்னிலங்கையில் ஜே.வி.பியினர் மேற்கொண்ட போராட்டங்கள் - வன்முறைகளையும் பிரேமதாச கட்டுப்படுத்த வேண்டிய நிலையிலிருந்தார். இந்திய இராணுவத்தை வெளியேற்ற முற்றுமுழுதாக அவர் விடுதலைப் புலிகளின் வழிமுறையை ஊக்குவித்தார். இந்திய இராணுவம் வெளியேறிய பின்னர் விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் இறங்குவது என்பதும் அவரது நோக்கமாக இருந்தது. இவையெல்லாம் தெரியாத விடயங்களல்ல.

இப்போது கருணா இந்த விடயங்களை கூறியிருப்பது சாதாரண சிங்கள மக்களுக்கு - சிங்கள இளம் தலைமுறையினருக்கு சில வேளைகளில் புதிய செய்தியாக இருக்கலாம். கருணா தெரிவித்திருக்கும் படையினரை கொலை செய்ததான தகவலும், பின்னர் தெரிவித்த பிரேமதாச புலிகளுக்கு ஆயுதம் வழங்கிய தகவலும் தற்போது தேர்தல் பரப்புரைக் களத்தில் எதிரெதிர் தரப்பினருக்குப் பேசுபொருளாக உள்ளது.

பிரேமதாச விடுதலைப்புலிகளுக்கு ஆயுதம் வழங்கியதாகக் கூறப்படும் கருத்து ஆதாரமற்றது என ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சிலர் தற்போது கூறினாலும், ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சராக இருந்த காமினி ஜயவிக்ரம பெரேரா அதனை ஒப்புக்கொண்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் ஆட்சிக் காலத்தில், இலங்கையில் நிலைகொண்ட இந்திய இராணுவத்தினரை தோற்கடிக்கும் நோக்கில், விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டதென அவர் அண்மையில் தெரிவித்திருக்கின்றார். குருநாகல் பிரதேசத்தில் கடந்த 28ஆம் திகதி நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"ரணசிங்க பிரேமதாச ஆட்சிக்கு வந்ததும், இலங்கையில் இருந்து இந்திய இராணுவத்தினரை வெளியேறுமாறு அவகாசம் வழங்கினார். இலங்கையின் தேசியக் கொடிக்குப் பதிலாக வடக்கு, கிழக்கிற்கு என்று தனியான கொடியை அறிவிக்குமாறு, இந்திய இராணுவம் வரதராஜப் பெருமாளுக்கு அறிவித்தது. இச்சந்தர்ப்பத்தில் அப்போதைய ஜனாதிபதி பிரேமதாச அதற்கு எதிர்ப்பை தெரிவித்து, பிரபாகரனுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். இந்திய இராணுவத்தை வெளியேற்ற விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கினார்" என அவர் அந்த சந்திப்பில் வைத்து தெரிவித்துள்ளார்.

எனவே, இனிவரும் நாட்களில் நடைபெறவுள்ள தென்னிலங்கை தேர்தல்

(தொடர்ச்சி 09ஆம் பக்கம்...)

World Class Realty Point Brokerage
Affordable Homes ♦ Pre-Construction Condos
Investment Properties
Search Here - Find Here
www.HOUSEPRICE.ca
Right Realtor Right Price
HousePrice.ca
Sam Surendran
Sales Representative
Dir: 647.350.0220
World Class Realty Point Brokerage
55 Lebovic Ave, #C115, Toronto, ON M1L 0H2. Tel: 416.444.7653

# வடமாகாண...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

அதேவேளை 2007ஆம் ஆண்டிற்கு முற்பட்ட ஆண்டுகளில் வடமாகாணம் 3ஆவது நிலைக்குள் இருந்தமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக மாவட்ட அடிப்படையில் 2006 தொடக்கம் 2009 வரை வவுனியா மாவட்டமே முதலாம், இரண்டாம் நிலைகளில் இருந்தது. இதற்கு, அப்போதைய வவுனியா வலயக் கல்விப் பணிப்பாளர் எடுத்த துரித கல்விச் செயற்பாடுகளும், அவரது நிர்வாகக் கட்டுப்பாடுகளும் காரணமாக இருந்தன.

2007ஆம் ஆண்டிற்கு முன்னர் வடமாகாணம் கல்வி அபிவிருத்தியில் மேலோங்கி இருந்தமைக்கான காரணங்களாக பின்வருவனவற்றையும் குறிப்பிட வேண்டியது எங்கள் வரலாற்றுக் கடமை.

தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த நேரத்திலும் கல்வி, கலை, பண்பாட்டு அபிவிருத்திச் செயற்பாடுகளின் வளர்ச்சிக்காக, கல்வி அபிவிருத்தி தொடர்பாக செயலமர்வுகள், வழிகாட்டல்கள், கருத்தரங்குகள், முன்னோடிப் பரீட்சைகள் என்பவற்றை நடத்துவதற்கும், கண்காணிப்பதற்கும் 'தமிழீழ கல்விக் கழகம்' 'கல்வி மேம்பாட்டுப் பேரவை' போன்ற கல்விசார் அமைப்புக்களையும் உருவாக்கி அவற்றில் புகழ் பெற்ற கல்வியாளர்களையும், பல்கலைக் கழகப் பேராசிரியர்களையும், கல்வி அதிகாரிகளையும், சில அதிபர்கள், ஆசிரியர்களையும் இணைத்துப் பல்வேறு அபிவிருத்தி முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர்.

அதேவேளை மாணவர்கள், ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் துணை நூல்களை 'தமிழ் வளர்ச்சிக் கழகம்' உள்நாட்டு மாணவர்களுக்காகவும், புலம் பெயர்ந்த மாணவர்களுக்காகவும் வெளியிட்டு இலவசமாகவே வழங்கிவந்தன.

விடுதலைப் புலிகளின் இறுக்கமான நிர்வாக நடவடிக்கைகள் காரணமாக போதைவஸ்து பாவனை, மதுபானசாலைகள், பாலியல் மற்றும் சிறுவர் துஸ்பிரயோகங்கள் என்பன கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. இதனால் மாணவர்களின் கவனம் முழுமையாகக் கல்வியின் மீதே இருந்தது.

பெண்களுக்கான 100 வீத பாதுகாப்பு இருந்தது. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில், நள்ளிரவில் கூட இளம் பெண்கள் சுதந்திரமாக நடமாடித் திரிவதை காணமுடியும். இந்தச்சூழல் கற்பதற்கான உறுதியான மனோநிலையையும், தன்னம்பிக்கையையும் உருவாக்கி இருந்தது. விமானக் குண்டு வீச்சுக்கள், கடற்படையினரின் பீரங்கித் தாக்குதல்கள், எறிகணைகள் என்பவற்றின் அச்சத்திலும், ஆசிரியர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் உன்னத நிலையிலேயே இருந்தன. தமது கடமைகளைச் சரிவரச் செய்யாது காலத்தைக் கடத்துகின்ற அதிபர், ஆசிரியர்கள்மீதான கண்காணிப்பும் மேற்பார்வையும் கல்வி அலுவலகங்களினூடாக இறுக்கமாகக் கடைப்பிடிக்க விடுதலைப்புலிகள் வழிகாட்டினர்.



பாடசாலை மாணவர்களுக்குப் பொதுஅறிவுப் போட்டிகள் மற்றும் வருட இறுதிப் பரீட்சைகள் என்பனவற்றை நடத்தியதுடன் கடுமையான பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், பாடசாலைகளுக்கு அத்தியாவசியமாகத் தேவையான எழுதுகருவிகளையும், கற்றல் உபகரணங்களையும் இலவசமாகவே வழங்கிவந்தனர்.

மிகச் சிறந்த பெறுபேறுகளையும், கல்வியில் உயர்ந்த அடைவு மட்டத்தையும் காட்டுகின்ற மாணவர்களையும், ஆசிரியர்களையும், அதிபர்களையும் ஊக்குவிக்கும் வகையில் பாராட்டு விழாக்களையும், விருது வழங்கும் நிகழ்வுகளையும் ஒழுங்கு செய்ததால் மாணவர்களும், ஆசிரியர்களும் ஊக்குவிக்கப்பட்டனர். அன்று அவர்களுடைய நல்லாசிரியர், நல்ல அதிபர் தெரிவுகள், அவர்களது விடுப்பு மட்டும் கவனத்தில் எடுக்கப்படாது, குறிப்பிட்ட அபிவிருத்தி சார்ந்த சில குறிகாட்டிகளுக்கமைய அகவயத் தன்மையற்ற முறையில் இருந்ததால், அவற்றை எல்லோருமே ஏற்றுக் கொண்டிருந்தனர்.

பாடசாலை நேரங்களில் காலையிலும், பிற்பகல் 4.00 மணிக்கு முன்னரும் தனியார் கல்வி நிறுவனங்கள் இயங்குவதைத் தடை செய்ததுடன், அவற்றின் செயற்பாடுகளின் மீதும் கட்டுப்பாடுகளையும் விதித்திருந்ததால், பாடசாலைக் கல்விக்கு அனைத்துத் தரப்பினராலும், முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது.

மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் படைப்பாற்றலையும் வாசிப்புத் திறனையும், அறிவியல் அறிவையும் மேம்படுத்துவதற்காக மாணவர்களுக்காக 'சாளரம்' என்ற அறிவியல் சஞ்சிகையையும், ஆசிரியர்களின் வாண்மை விருத்தியை மேம்படுத்துவதற்காக 'விளக்கு' சஞ்சிகையையும், பெண்களுக்காக 'நாற்று' என்ற சஞ்சிகையையும், கலை, இலக்கிய ஆர்வலர்களுக்காக 'வெளிச்சம்' என்ற சஞ்சிகையையும் வெளியிட்டு வந்தனர்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் கட்டாயக் கல்வித்திட்டம் கடுமையாக நடைமுறைப் படுத்தப்பட்டதால் 5 வயது தொடக்கம் 14 வயது வரையான பிள்ளைகள் எவரும் பாடசாலைகளுக்குச் செல்லாது வீட்டில் இருந்ததில்லை.

ஆசிரியர் பற்றாக்குறை மோசமாக நிலவிய பல கிராமப்புறப் பாடசாலைகளில் 'தமிழீழ கல்விக் கழக'த்தினூடாக ஆசிரியர்கள் தெரிவுசெய்யப்பட்டு கற்பித்தல் பயிற்சிகளும் வழங்கப்பட்டு அதன் பின்னர் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டனர். அந்த ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளும் தமிழீழக் கல்விக்கழகத்தினாலேயே வழங்கப்பட்டன. இதனால் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் கிராமப்புறங்களிலும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டன.

அரசியல்வாதிகளின் தலையீடுகள் இல்லாததால், அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விப் பணிப்பாளர்கள் சுயமாகச் சிந்தித்து முடிவெடுத்ததால் ஆசிரியர் இடமாற்றங்கள், நியமனங்கள், வளப்பங்கீடுகள், நிதி ஒதுக்கீடுகள் மற்றும் கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகள் நியாயமான முறையில் இருந்ததுடன், அவை எல்லாமே வெளிப்படைத் தன்மையுடையனவாகவும் இருந்தன.

எவரேனும் நிதிக்கையாடல்கள் அல்லது இலஞ்சம், பாலியல், சிறுவர் துஸ்பிரயோகம் போன்ற மோசடிகளில் ஈடுபட முடியாத அளவுக்கு, விடுதலைப்புலிகளின் கல்விப்பிரிவு விழிப்புடன் இருந்தது. இதனால், கல்விக்காக ஒதுக்கப்படுகின்ற நிதி முழுவதும் பிள்ளைகளுக்கே பயன்படுத்தப்பட்டதுடன், எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் மோசடிகள் எதுவும் நடைபெறவில்லை. அந்தக் காலப்பகுதியில் இருந்த மின்சாரத் தடையினால், மாணவர்களோ ஆசிரியர்களோ தொலைக்காட்சிகள், கைத்தொலைபேசிகள், சினிமாக்கள் என்பவற்றைப் பயன்படுத்தும் வசதிகள் இல்லாதிருந்ததால், கற்பதற்கான போதிய நேரம் கிடைத்தது. அதேவேளை மாணவர்கள் மண்ணெண்ணெய் குப்பி விளக்குகளின் கீழேயே இருந்து தமது கற்றலை மேற்கொண்டமையால், கற்பதற்கான அமைதியான சூழலும் மனதை ஒருமைப்படுத்தும் தன்மையும் இருந்தது.

மேலே உள்ள அட்டவணை 2இன் படி 2009ஆம் ஆண்டில் இருந்து, 2019ஆம் ஆண்டு வரையுள்ள 11 வருடங்களுக்கான மாகாணங்களின் பெறுபேற்று வீதம் காட்டப்பட்டுள்ளன. 2009இல் இருந்து அனைத்து மாகாணங்களிலும் கல்வி வளர்ச்சிவீதம் படிப்படியாக அதிகரித்துச் செல்வதைக் காணலாம். அதேவேளை கல்வி அபிவிருத்திச் செயற்பாடு தொடர்பாக மீளாய்வு செய்யப்பட வேண்டிய முக்கியமான தரவாக இருப்பது, 2009ஆம் ஆண்டில் க.பொ.த. உயர்தரத்திற்கு தகைமை பெற்றோர் தேசிய நிலையில் 52.6 வீதமாக இருந்து பின்னர் படிப்படியாக உயர்ந்து 2019இல், 76.5 வீதமாக உயர்ந்து வந்தமையானது வடமாகாணம் உட்பட இலங்கையின் ஒட்டு மொத்தமான கல்வித் தரம் உயர்ந்து கொண்டு வருவதையும் புலப்படுத்துகின்றது. எடுத்துக் காட்டாக, உயர்தரத்திற்குத் தகைமை பெற்றோர்,

* வடக்கு மாகாணத்தில் 2009இல் 55.7 வீதமாகவும், 2019இல் 67.74 வீதமாகவும்
* கிழக்கு மாகாணத்தில் 2009இல் 47.5 வீதமாகவும், 2019இல் 70.25 வீதமாகவும்
* தென்மாகாணத்தில் 2009இல் 53.1 வீதமாகவும், 2019இல் 78.3 வீதமாகவும் உயர்ந்து காணப்படுகின்றது.

ஆனால் கல்வி அபிவிருத்தியின் சாதனைகள் தொடர்பான பாடசாலைகளின் பிரசாரத்தில், முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டிய தரவு, க.பொ.த. சாதாரண தரப் பொதுப் பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் சித்திபெறத் தவறியோர் வீதமே பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும். கீழே அட்டவணை 3இற்கு அமைய அனைத்துப் பாடங்களிலும் சித்திபெறத் தவறியோர் வீதமானது, வடமாகாணத்திலேயே அதிகமாகக் காணப்படுகின்றது.


வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மாகாணக் கல்வித் திணைக்களங்கள் எடுத்த துரிதமான அபிவிருத்திக்குப் புறம்பாக, 'ஆறுதல்' என்ற கல்வி சார் நிறுவனத்தின் சில ஊக்குவிப்புச் செயற்பாடுகளும் கணிசமான பங்கை வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கல்விஅபிவிருத்தி, முன்பள்ளிக் கல்வி அபிவிருத்தி, உளசமூக செயற்பாடுகள் போன்றவற்றின் அபிவிருத்தியில் 'ஆறுதல்' நிறுவனம் 2011ஆம் ஆண்டு தொடக்கம் செயற்படத் தொடங்கியதில் இருந்து தரம் 3 தொடக்கம் க.பொ.த.சாதாரண தரம் வரையான மாணவர்களுக்கு யாழ்ப்பாணத்தின் சிறந்த வளவாளர்களின்

(தொடர்ச்சி 08ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!

• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 6, Scarborough, ON M1H 1A7

# மன்னித்தலிலும் ஆற்றல் மிக்க ஆயுதம் இல்லை



சி. நற்குணலிங்கம்
நெல்லியடி - இலங்கை

மன்னிப்பு என்பது அன்பின் செயல். மன்னிப்பது என்றால், புண்படுத்திய நபரைத் தண்டிக்காமல் விட்டுவிடுவதாகும். கோபத்தையும், மனக்கசப்பையும், பழி வாங்கும் எண்ணத்தையும் விட்டுவிடுவதாகும். அதற்காகத் தவறைக் கண்டும் காணாமல் விட்டுவிடுவதோ அல்லது தவறை குறைவாக எடைபோடுவதோ கிடையாது. மாறாகப் பிரச்சினை கொடுத்த நபருடன் சமாதானத்தையும், நல்ல பந்தத்தையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற நோக்குடன் நன்றாக யோசித்து எடுக்கப்படும் தனிப்பட்ட தீர்மானமாகும். மன்னித்தல் ( forgiveness ) என்பது செய்த தவறு, குற்றம் போன்றவற்றுக்காக ஒருவர் மீது கோபம் கொள்ளாமல், நடவடிக்கை எடுக்காமல் இருக்க முடிவெடுத்து அதை அவருக்கு உணர்த்தும் செயல். மன்னித்தல் தன்னிலையில் இருந்து மாறுதல். இரக்கம் கொண்டு முடிவை மாற்றிக்கொள்ளல். மனம் இரங்குதல். பொறுத்தல் எனவும் பொருள்படும். இம் மன்னித்தல் என்பது இன்று எம் மக்கள் மத்தியில் மிகவும் அருகிவிட்ட ஒரு செயலாகும்.

மன்னிப்பு என்பது வெறும் உணர்வல்ல. இறைவன் காட்டும் இரக்கமுள்ள அன்பு போல் எம்மைப் பகைத்தோரையும் வெறுப்பை விதைத்தோரையும் மன்னிக்க நாம் எடுக்கும் முடிவு. ஒருவரை மன்னிக்கும் பக்குவமான மனவளர்ச்சியின் ஊடேதான் மாற்றங்களை சரிவரக் கட்டமைத்துக் கொள்ள முடியும். தவறு செய்தோரை மன்னிப்பதென்பது மனமோகனத்தின் ஆழ்வெளியில் இருந்து தோற்றம் பெறும்போதே அது புனிதமான பண்பாகப் பரிணாமம் பெறுகின்றது. இத்தகு சிறப்பான பண்பியல் கூறின் உருவாக்கத்தை ஒருவர் மற்றவர் மீது வலிந்து திணிக்க முடியாது. அவை தானாகவே உருவாக வேண்டும்.

மன்னிக்கும் குணத்தில் அன்பு உட்பட்டிருக்கிறது, புரிந்து கொள்ளுதல் உட்பட்டிருக்கிறது. 'ஒருவர் மேல் ஒருவருக்கு ஏதாவது மனக்குறை இருந்தால் ஒருவரை ஒருவர் பொறுத்துக் கொள்ளுங்கள். தாராளமாக மன்னியுங்கள்' என பைபிள் கூறுகிறது. மன்னிக்கும் குணம் எல்லோரையும் பரிபூரணமாக இணைக்கும், அன்பின் ஒரு முக்கிய அம்சம். ஒரு செயலைத் திரும்பத் திரும்பச் செய்யும்போது அந்தச் செயல் அடிப்படை பழக்கமாகிவிடுகிறது. இதனால்தான் ஏழு முறையல்ல எழுபது முறை மன்னிக்க வேண்டுமென்று மன்னிப்பின் எல்லையற்ற தன்மையை விளக்கி மன்னிப்புப் பண்பாட்டைப் பரவலாக்க




அழைப்பு விடுகிறார் இயேசு. மன்னிப்பது கோழைத்தனமும் அல்ல வெட்கமான செயலுமல்ல. அது ஒரு புதிய சமத்துவத்துக்கான தழைச்சத்து. எப்போது மன்னிக்கும் மனநிலை உதயமாகிறதோ அப்போதே மகிழ்ச்சியின் பாதையில் எமது வாழ்க்கையின் பயணம் புறப்படும். இதயம் எவ்வளவு உறுதியானதாக இருக்கிறது என்பதைவிட மன்னிப்பதற்குரிய மனம் இருக்கின்றதா என்பதே வாழ்வில் முக்கியம்.

மன்னிப்பதால் சந்தோசமான பந்தங்களை அனுபவிக்க முடியும், மனதைப் புண்படுத்தியவரைப் புரிந்துகொண்டு அவர் மேல் அனுதாபத்தையும் காட்ட முடியும், மனநிம்மதியும், திருப்தியும் கிடைக்கும், கவலை, மன அழுத்தம், பகை உணர்ச்சி குறையும், மனம் சுத்தமடையும், மண முறிவு ஏற்படுவதைத் தவிர்க்கலாம், குடும்பச் சண்டைகள் தவிர்க்கப்படும், குடும்ப வன்முறைகளைத் தவிர்க்கலாம், நல்ல மனப்பாங்குகளை வளர்த்துக் கொள்ளலாம், கருத்து வேறுபாடுகள் குறைவடையும், குடும்ப உறவில் விரிசல் ஏற்படாது, குடும்பத்தை வழிநடத்திச் செல்வது இலகுவாக இருக்கும், குடும்ப விளக்கு அணையும் நிலை ஏற்படாது, நல்லொழுக்கப் படிமங்கள் வழி தவறிச் செல்லாது, மனிதம் மேலோங்கும், வாள் வெட்டுக் கலாசாரம் இல்லாது ஒழியும், பிரச்சினைகளின் போது பொதுச் சொத்துக்கள் அழிக்கப்படுவது அழிவடையும், பழிவாங்கும் பழக்கம் இல்லாதொழியும், எந்தவொரு பிரச்சனைக்கும் நிச்சயமான ஒரு தீர்வு கிட்டும், மனிதன் மனித இயல்புகளுடன் வாழலாம், மனிதப் பெறுமானத்தை வழுவாது கொண்டுசெல்ல முடியும், ஏனையவர்களுடன் ஏற்படும் பிரச்சினைகளிலிருந்து விடுபட முடியும், உணர்வைச் சிதைக்கும் உளநெருக்கீட்டின் தாக்க மேலீட்டால் நிகழும் தற்கொலைகளிலிருந்து விடுபடலாம், அடுத்துள்ள மனிதருடன் ஒப்புரவாகி உறவுகொள்ள முடியும், உறவுகளை நிலைக்கச் செய்யும், அன்பை விடக் கூரிய ஆயுதம் இல்லை, தனக்குத் தானே நல்லவனாக இருக்கலாம், இவ்வாறான நன்மைகள் இருந்தும் மன்னித்து உறவாடக் கிடைக்கும் சந்தர்ப்பங்களை உதறித்தள்ளி புறக்கணிப்பை, வெறுப்பை வெளிப்படுத்தித் தீராத பகையை வளர்ப்போர்தான் இங்கு அதிகம்.

எம்மை நாம் மன்னிப்பதே குறைவு. எம்மை நாம் மன்னிப்பது சிறந்ததாகும். நம்மை நாம் மன்னிப்பது கடினமான ஒன்றுதான். ஆனால் உடல், மன ஆரோக்கியத்துக்கு அது மிகவும் முக்கியம். உங்களை நீங்களே மன்னிக்க உதவும் சில விடயங்களாக நீங்களும் தவறு செய்பவர்தான் என்ற உண்மையை ஒத்துக்கொள்ள வேண்டும், நீங்கள் செய்யும் தவறுகளிலிருந்து பாடம் கற்றுக் கொள்ளுங்கள், உங்களிடம் நீங்கள் பொறுமையாக இருங்கள், நல்ல நண்பர்களுடன் பழகுங்கள், ஒரு நபரை புண்படுத்திவிட்டால் அதை ஒத்துக்கொள்ளுங்கள், உடனடியாக மன்னிப்பு கேளுங்கள்.

எதுவாக இருந்தாலும் சகிப்புத் தன்மை என்பதெல்லாம் மலை ஏறிய காலம் ஆகிவிட்டது. தவறு செய்யாத மனிதரே கிடையாது என்பதை சிலபோது நாம் மறந்து போகின்றோம். தவறு செய்த மனிதரிடம் கடுமையாக நடந்துகொள்வதை மட்டும் மறக்காமல் இருக்கின்றோம். கூறுங்கள் இங்கு யார்தான் உத்தமர்? தவறிழைப்பது மனித இயல்பு. அப்படி ஒருவர் தவறு செய்துவிட்டால் அவரிடம் கடுமையாக நடந்துகொள்வதுதான் கொடுமையிலும் கொடுமை. எவ்வளவு தூரம் கேவலப்படுத்த முடியுமோ அவ்வளவு தூரம் கேவலப்படுத்தி, இழிவுபடுத்திப் பொதுத் தளத்தில் இருந்தே ஓட, ஓட விரட்டி மூலையில் முடக்குவதுதான் இங்கு வெறித்தனமாக நடந்தேறி வருகின்றது. ஏனையோருக்கு மதிப்பளிக்கின்ற பண்பியல்போடு வாழமறுப்பது நல்லதல்ல. மற்றோர் புரிகின்ற தவறுகளை மறந்து மன்னிக்கும் மனோபாவம் எம்மிடையே வளம் பெறவேண்டும்.

மன்னிக்கின்ற மனோதத்துவமே உண்மையான அறிவு. தெய்வத்தின் இயல்பு. வெற்றிக்கான வழி என்பதும் மாறுதலற்ற சித்தாந்தம். பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடிய பாரதூரமான செயலுறுதிகளில் நாம் விடுபட முயற்சிக்க வேண்டும். பொறுமை காக்க வேண்டும். சிந்தித்துச் செயலாற்றி மன்னிப்பு என்ற உயரிய பண்பியல்பை வெளிப்படுத்த வேண்டும். இதன்மூலம் தேவையற்ற பிரச்சினைகளை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்திவிடலாம். மன்னிக்கின்ற மனோபாவத்தை பலவீனமான காரியம் எனத் தவறாக எண்ணுவோர் இங்கு உள்ளனர். மன்னிப்பு என்ற செயற்காரியம் மன்னிப்பு வழங்குபவரையும், மன்னிப்புக் கோருபவரையும் குளிர்ச்சியாகவும், அமைதியாகவும் வைத்திருக்கின்றது. இதனூடே நடத்தைக் கோலத்தில் மாற்றங்களைக் கண்டுகொள்ள முடியும். அமைதியாக இருக்கும் தருணங்களில் மன்னிப்பு என்ற செயற்கூறின் சிறப்பை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமக்குத் தீமை செய்தவர்களையும் மன்னித்து விடும் குணம் படைத்தோர் மனிதரில் உயர்வானோர் எனச் சான்றோர் கூறுவர். இயேசுபிரான், புத்த பிரான், மகாத்மாகாந்தி போன்றோரும் இதனையே வலியுறுத்தி உள்ளனர். தாமும் அவ்வாறே வாழ்ந்து காட்டினர். ஆனால் இன்றைய தமிழ் சமூகத்தின் இயங்கு நிலையை எடுத்து நோக்கின் அங்கு சண்டித்தனம், வெட்டுக்கு வெட்டு, கொலைக்கு கொலை, அடிக்கு அடி என்ற தீமையின் படிமங்கள் ஆழமாக வேரூன்றி உள்ளது. இந்நிலை மாற்றம்பெற மன்னிக்கும் பண்பைச் சமுதாயம் ஒரு மனதாக வரவேற்க வேண்டும்.

விளம்பரம்
VLAMBARAM
30 ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# வடமாகாண...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

உதவியுடன் கற்றல் ஊக்கிகளை கல்வி அமைச்சின் முன் அனுமதியுடன் விநியோகித்து அதனைச் செயற்படுத்தி வந்ததுடன் தவணைக்கு ஒருதடவை கற்றல் ஊக்கிகள் தொடர்பான மீளாய்வும் எழுமாற்றாக மேற்கொள்ளப்பட்டு வந்ததன் காரணமாக 2012ஆம் ஆண்டிற்கு முன்னர் 60 வீதத்திற்குக் குறைவாக இருந்த பெறுபேற்று அடைவு மட்டம் 2012ஆம் ஆண்டில் இருந்து 60 வீதத்தையும் தாண்டி 70 வீதம் வரை வடக்குக்கிழக்கில் உயர்ந்து சென்றுள்ளது.

அதேபோன்று அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையாதோர் வீதம் வடமாகாணத்தில் 2010ஆம் ஆண்டில் 4.83 வீதமாகவும், 2019இல் 2.63 வீதமாகவும், கிழக்கு மாகாணத்தில் 2009இல் 3.76 வீதமாகவும், 2019இல் 2.48 வீதமாகவும் குறைவடைந்தமைக்கும் இவ்வகையான ஊக்குவிப்புக்கள் உதவியாகவும் இருந்தன.

இதில் பிரதானமாகக் கவனிக்க வேண்டிய வடக்கு கிழக்கு மாகாணங்களை விடத் தென் மாகாணத்தின் கல்வி அபிவிருத்தியில் ஏற்பட்ட துரிதமான மாற்றங்கள் முக்கியமாகப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். 2009இல் 4ஆவது இடத்தில் இருந்த தென் மாகாணம் படிப்படியாக அதிகரித்து 2014ஆம் ஆண்டில் இருந்து 2019ஆம் ஆண்டு வரையுள்ள ஆறு வருடங்களும் தொடர்ச்சியாக முதலாம் இடத்திற்குக்



கொண்டுவரப்பட்டது. இந்தப் பெறுபேறுகள் தேசிய மட்டத்தை விட மிக உயர்வாகக் காணப்படுகின்றன. (தொடரும்)

# இலங்கை...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

இங்குள்ள பதியப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 1,785,964. இலங்கை முழுவதுமாகப் பதியப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 16,263,885 ஆகும்.



Candidates from the Tamil National Peoples' Front (TNPF)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் இருந்து விகிதாசார முறைப்படி 29 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர். அவர்கள் முறையே: யாழ்ப்பாணம்-7, வன்னி-6, மட்டக்களப்பு-5, திருகோணமலை-4, திகாமடுல்ல (அம்பாறை)-7 ஆகும். வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்து வாக்களிக்கத் தகுதி பெற்றோர் 2,071,527பேர் ஆகும். இது நாடு முழுவதும் வாக்களிக்கத் தகுதி பெற்றோரில் 12.73% ஆகும்.



Candidates from the Thamizh Makkal Kootani (TMK)

2015இல் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு அதிக ஆசனங்களைப் பெற்ற UNFஐச் சேர்ந்த ஐக்கிய தேசியக் கட்சியில் (UNP)இருந்து பிரிந்து சஜித் பிறேமதாசாவின் தலைமையில் SJB எனப்படும் ஒரு புதிய கட்சி அமைக்கப் பட்டுள்ளது. அந்தப் புதிய கட்சி ஐக்கிய மக்கள் சக்தி என்ற கருத்துள்ள Samagi Jana Balawegaya பெயரில் போட்டியிடுகிறது. வழமையான யானைச் சின்னத்தில் போட்டி யிடும் ரணில் விக்கிரமசிங்கவைத் தலைமையாகக் கொண்ட UNP கட்சியும் தொலைபேசிச் சின்னத்தில் போட்டியிட விருக்கும் சஜித் பிறேமதாசாவைத் தலைமையாகக் கொண்ட SJB கட்சியும் இணைந்து அன்னம் சின்னத்தில் போட்டியிட வைக்கும் முயற்சி தோல்வி அடைந்ததால் இந்த இரண்டு கட்சிகளும் தனித்தனியாக தேர்தலைச் சந்திக்கின்றன. ரணில் விக்கிரமசிங்கவைத் தலைமை யாகக் கொண்ட UNPஐச் சேர்ந்த 77 தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் களில் 52இற்கு மேற்பட்டோரின் ஆதரவு சஜித் பிறேமதாசாவைத் தலைமையாகக் கொண்ட SJB கட்சிக்கு இருப்பது குறிப்பிடத்தக்கது.

2015இல் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு இரண்டாவது அதிகப்படியான ஆசனங்களைப் பெற்ற UPFA இம்முறை மஹிந்த ராஜபக்ச தலைமையிலான சிறீலங்கா பொதுஜன பெரமுன (SLPP) என்ற கட்சியில் தாமரை மொட்டு சின்னத்திலும் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) கை சின்னத்திலும் தேர்தலைச் சந்திக்கின்றன.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 19 பதியப்பட்ட கட்சிகளும் 14 சுயேட்சை வேட்பாளர்களைக் கொண்ட குழுக்களும் போட்டியிடுகின்றன. அங்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் (வீடு சின்னம்) பெயரில் போட்டியிடும் தமிழ் தேசியக் கூட்டணி (TNA), அகில இலங்கைத் தமிழ் காங்கிரசின் (சையிக்கிள் சின்னம்) பெயரில் போட்டியிடும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி (TNPF) மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் -TMK (மீன் சின்னம்) தமிழ் வேட்பாளர்களை அருகில் உள்ள படங்களில் (நன்றி. தமிழ் காடியன்) காணலாம்.

# தேர்தல்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

பரப்புரைகளில் இந்த விவகாரம் அதிகம் பேசப்படலாம் அல்லது இதனை அதிகம் பேசாமலும் விடலாம். ஆனாலும், கருணா தற்போது ஊடகங்களுக்கு சுவாரஸ்யமான ஒரு மனிதராக மாறியுள்ளார். தமிழ் ஊடகங்களை விடவும் சிங்கள ஊடகங்கள் அவரிடம் தொடர்புகொண்டு வருகின்றன.

அண்மையில் சிங்கள காணொளி ஊடகம் ஒன்று அவரிடம் நீண்ட பேட்டி ஒன்றை எடுத்திருந்ததைக் காணமுடிந்தது. அதில் விடுதலைப்புலிகளின் ஆரம்பகால வரலாறு- அதாவது இந்தியாவில் அவர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டமை, அப்போதைய இந்திய அரசாங்கம் விடுதலைப்புலிகளுக்கு வழங்கிய உதவிகள், இதில் இந்தியப் புலனாய்வுப் பிரிவான 'றோ'வின் வகிபாகம் உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் கருணாவிட மிருந்து கறந்தெடுக்கும் முயற்சியில்



அந்த ஊடகம் ஈடுபட்டது. அந்த வகையில், நீண்ட காலத்திற்கு பின்னர் கருணா தென்னிலங்கை அரசியலில் பேசபொருளாகவும், ஊடகங்களுக்கு ஒரு சுவாரஸ்யமான மனிதராகவும் மாறியுள்ளார்.

## அன்னை கனடாவின் ஆண்டு நூற்றைம்பத்துமூன்று




**நேரிசை வெண்பா.**

ஆண்டுநூ றொடம்பத்து மூன்றாமே அன்னைக்கு
இன்பத் திருநாளில் ஈழவர்நாம் _ அன்புமாலை
சூட்டியே வாழ்த்துவோம் செந்தமிழால் சீரோங்கக்
கூட்டாட்சி மேலோங்கத் தான்.

நாடிழந்து வந்தவரை நன்னோக் குடனேற்று
கூடிவாழ வைத்த குணவதியே _ வாடிடாதே
வாழநாம் வாய்ப்பளித்த வண்ணமகள் நாயகிக்கு
ஆழ்மனதால் வாழ்த்திடுவோம் ஆம்.

அன்னை கனடா அரவணைத்த காரணத்தால்
இன்பமாய் வாழ்கிறோம் இந்நாட்டில் _ கன்னியிவள்
ஆண்டிந்நாள் நூற்றொடம்பத்(து) மூன்றேதான் ஆனாலும்
ஈண்டிவள் மேலோங்க வாழ்த்து.

மனித த்தை நேசிக்கும் மாதா கனடா
புனிதத்தைப் போற்றும் பூவை _ கனிவான
போக்கும் களிசிந்தை, போர்விரும்பா மாதரசி
ஊக்குசக்தி கொண்டவளின் ஓர்ப்பு.


**எழுசீர் கழிநெடிலாசிரிய விருத்தம்.**

பனிபடர்ந்த பூமியெங்கும் பார்ப்பதற்குப் பாற்கடல்போல்
பளிங்கொளிர் பேரழகாள் செல்வியவள்
கனிவான பார்வையோடு காட்சிக் கினியளாய்
காலமெல்லாம் கோலோச்சும் கன்னியிவள்
முனிவில்லா ஆட்சியாளர் முன்னெடுக்கும் செயற்றிட்டம்
முழுநிறைவாய்ப் பயன்கள் கூட்டும்
கனிவாக வாழுகின்ற கன்னியரும் காளையரும்
கலகலப்பாய் வாழ்வர் இங்கு.

**பதினான்குசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.**

நீர்வளமும் நிலவளமும் நிறைந்தி லங்கும்
 நீதிநெறித் திருமகளே நீடு வாழ்க!
நிலமகளே நீயளித்தாய் நிலைதளர்ந் தோர்கள்
 நிம்மதியாய் வாழ்வதற்கு நிதிகள் ஈந்தே
சேர்ந்தோர்க்கு நற்கல்விச் செல்வம் சேர்த்துச்
 செயற்கரிய செயலளித்துச் சுகம ளிப்பாய்
சேவைநலம் பாராட்டிச் சிறப்புச் செய்வாய்
 சிறந்தநல் வைத்யமும் சேர்ந்து கொள்ளத்
தார்மீக மனம்படைத்த தாய்நின் அன்புத்
 தயவுண்டு எல்லோர்க்கும் தயக்க மில்லை
தவிக்கின்ற அகதிகட்குத் தக்க சேவை
 தரமறிந்தே வழங்குகின்ற தகமை என்னே!
போர்விரும்பா நாயகிச்சீர் புவனம் போற்றும்
 புருமன்றில் தெய்வநீதிப் பெருமை கூர்க்கும்
பொதுவாழ்வில் முன்னிற்கும் பெரியோர்க் கெல்லம்
 பேரன்பை ஈகின்ற பெருஞ்சீர்த் தேவி.

முருகேசு மயில்வாகனன்




416.321.6969

HomeLife / GTA Realty Inc. Brokerage*

HOMELIFE
HIGHER STANDARDS

5215 Finch Ave. E., #203, Toronto ON. M1S 0C2


*Independently Owned & Operated

# ஊரடங்கில் என்ன செய்கின்றனர் தமிழக பிரபலங்கள்?

**தொகுப்பு கண்ணன்**

இந்தியாவில் மார்ச் 24ஆம் திகதி தொடங்கிய ஊரடங்கு, இடையே சில தளர்வுகளால் கொரோனா பரவல் அதிகமானதால், மீண்டும் கடுமையான கட்டுப்பாடுகளுடன் தொடர்கிறது. சென்னையில் நடைப்பயிற்சி செல்லவே தடை விதிக்கப்பட்டுள்ளது. அனைவரும் மீண்டும் வீடுகளுக்குள் முடங்கியுள்ளனர். பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்த பல்வேறு துறை சார்ந்த பிரபலங்கள் இந்த ஊரடங்கில் என்ன செய்கின்றனர்? தொலைப்பேசியில் பேசினோம்.

### திட்டமிட்டு வேலை செய்கிறேன்!
**எஸ். ராமகிருஷ்ணன், எழுத்தாளர்**



எவ்வளவு நேரம் படிக்கலாம்? எவ்வளவு மணி நேரம் எழுதலாம்? என்று முதலில் ஒரு நாளை சரியாக திட்டமிட்டுக் கொள்கிறேன். திட்டமிட்டு விடுவதால் நேரம் சரியாக இருக்கிறது. தொலைக் காட்சி பார்ப்பது, வாட்ஸப் பார்ப்பது இல்லை. ஷேக்ஸ்பியரை மறுவாசிப்பு செய்கிறேன். குறுந்தொகை பாடல்களில் தினம் பத்து வாசிக்கிறேன். இப்போது டால்ஸ்டாய் எழுதிய 'புத்துயிர்ப்பு' நாவலை வாசிக்க எடுத்து வைத்துள்ளேன்.

இதனையெல்லாம் முடித்துவிட்டு மனதிற்கு பிடித்தமான பீத்தோவன், மொஸார்ட் இசை கேட்பது, ஆவணப்படங்கள் பார்ப்பது, தனியாக இருக்கும் உள்ளூர் வெளிநாட்டு நண்பர்களுடன் தொலைப்பேசியில் உரை யாடுவது என்றிருக்கிறேன். அவர்களுக்கு நம்பிக்கை கொடுப்பதை வழக்கமான பணியாகக் கொண்டிருக்கிறேன். அதோடு, வீட்டில் எல்லோரும் சேர்ந்து படிக்கிறோம் கூடி விவாதிக்கிறோம்.

### குற்றவுணர்வில் செத்துக்கொண்டிருக்கிறேன்!
**கஸ்தூரி, நடிகை**



படப்பிடிப்பு இல்லையென்றாலும் எனக்கு ஓய்வு கிடையாது. காரணம் நான் ஒரு பெண். தினம் வேலை செய்யும் இல்லத் தரசி. படப்பிடிப்பு போகும்போது சமைக்கத் தேவையில்லை. அங்கேயே உணவு கொடுத்து விடுவர். இப்போது சமையல் வேலையே முழுவதும் இருக்கிறது. எனக்கு வீட்டில் பணியாட்கள் கிடையாது. நான்தான் வீட்டு வேலைகளைச் செய்வேன். தொலைக்காட்சி எல்லாம் இல்லை. பிள்ளைகள் உருப்படவேண்டும் என்று நினைக்கின்ற தாய் நான். எனவே, பொறுப்புகள் நிறைய இருக்கிறது.

எனக்கே இவ்வளவு வேலைகள் இருக்கும் போது சராசரி இல்லத்தரசிகளுக்கு இன்னும் அதிகம் இருக்கும். குழந்தைகள் யாரும் பள்ளிக்கு செல்லவில்லை. கணவர் அலுவலகம் செல்லவில்லை. அவர்களை நாள் முழுவதும் கவனித்துக்கொள்ள வேண்டும். எங்கள் குடியிருப்பில் இல்லத் தரசிகள் குழந்தைகளை எப்படி சமாளிப்பது என்பது தெரியாமல் திணறிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறேன். இப்போது கொஞ்சம் அதிக நேரம் தூங்க முடிகிறது. அவ்வளவு மட்டும்தான் அவர்களுக்கு ஆசுவாசம்.

எங்கள் அடுக்குமாடிக் குடியிருப்பில் தூய்மைப்படுத்துவது, காவல் காப்பது, செடிகளைப் பராமரிப்பது என்று நிறைய பணிப்பெண்கள் பணிபுரிகின்றனர். அவர்களுக்கும் அவரது கணவர்களுக்கும் இப்போது வருமானமே இல்லை. நாங்கள் எல்லோரும் அவர்களுக்கு உதவி செய்யலாம் என்று ஆலோசித்துள்ளோம்.

எனது அறக்கட்டளை மூலம், அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும், புற்றுநோய் பாதித்த 60 குழந்தைகளைப் பார்த்து வருகிறேன். இப்போது, கொரோனா வால் அவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்களே குறைந்து விட்டனர். இதனால், எல்லோருமே பாதிக்கப்பட்டிருக் கிறோம். என் அறக்கட்டளையிலுள்ள குழந்தைகளை காப்பாற்ற முடிய வில்லையே என்ற நான், குற்றவுணர்வில் செத்துக் கொண்டிருக்கிறேன்.

படப்பிடிப்பு ஒருநாள் நின்றாலே லைட்மேன் போன்ற தொழில்நுட்பக் கலைஞர்கள் உட்பட தினக்கூலி தொழிலாளர்கள் மிகுந்த சிரமத்துக்கு ஆளாவார்கள். இப்போது தொடர்ந்து 4 மாதங்களாக படப்பிடிப்பு நிறுத்தப்பட்டுள்ளது. 'நாங்கள் வைரஸ் வந்து செத்தாலும் பரவாயில்லை. எங்கள் குழந்தைகள் பட்டினியோடு சாகக்கூடாது' என்று அழுகின்றனர். என்ன செய்வதென்று தமிழ் திரைத்துறை கையை பிசைந்துகொண்டு நிற்கிறது. அவர் களுக்கு உதவ எல்லோரிடமும் நிதியுதவி கோரி வருகிறோம்.

இது போன்ற பல வேலைகள் குவிந்து கிடக்கின்றன. எனக்கு நேரம்தான் போதவில்லை.

### விவசாயம் செய்கிறேன்!
**வேல்முருகன், தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர்**

எங்கள் கட்சியின் சார்பில் 10 லட்சம் ரூபாய் செலவில் தமிழகம் முழுக்க ஏழை, எளிய மக்களுக்கு அரிசி, மளிகைப் பொருட்கள் உள்ளிட்டவற்றை அளித்து வருவதோடு எனது விவசாய நிலத்தில் விவசாயப் பணிகளையும் பார்த்து வருகிறேன். எனவே எனக்கு ஊரடங்கு ஓய்வு இல்லை.



என்னுடைய நிலத்தில் மா, பலா, வாழை ஆகிய முக்கனிகளையும், நெல்லி, கொய்யா, சப்போட்டா, கரும்பு, முந்திரி, தென்னை மரங்கள் போன்றவற்றையும் பயிரிட்டு வருகிறேன். மதிய நேரத்தில் எலுமிச்சைப் பழம் பறித்து குடும்பத்தோடு ஜூஸ் போட்டுக் குடிப்பேன்.

வாட்ஸப்பில் குழுக்கள் ஏற்படுத்தி கட்சித் தொண்டர்களுடன் உரையாடுகிறேன். லெனின், பிடல் காஸ்ட்ரோ போன்ற பல்வேறு வரலாற்றுத் தலைவர்களின் பேச்சுத் தொகுப்புகளைக் கேட்கிறேன். ஐ.ஏ.எஸ். அகாடமிகள் வழங்கும் பேரரசுகளின் வீடியோ தொகுப்புகளையும் பார்க்கிறேன்.

### எனது கிராமத்தினருக்கு விழிப்புணர்வூட்டுகிறேன்
**தம்பி ராமையா, நடிகர்**

ஊரடங்குக்கு முன்பும் படப்பிடிப்பு இல்லாத நாட்களில் நான் ஓய்வெடுப்ப தில்லை. எழுதிக்கொண்டே இருப்பேன் அல்லது புத்தகங்கள் வாசிப்பேன். இப்போதும் அப்படித்தான். வருமுன் காத்தல் முக்கியம். அதனால், வீட்டிலேயே தினம் உடற்பயிற்சிகள் செய்கிறேன்.



அதோடு, எனது கிராமத்தினருக்கும் நண்பர்களுக்கும் கொரோனா குறித்து

(தொடர்ச்சி 12ஆம் பக்கம்...)




# ஊரடங்கில்...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

விழிப்புணர்வூட்டுகிறேன். எங்கள் கிராமத்தில் உள்ளோரிடம், "தம்பி ராமையா நகைச்சுவை நடிகன். ஆனால், அவனே சீரியஸாக வீட்டுக்குள்ளேயே இருங்கள் என்று சொல்லும்போது யோசிக்கவேண்டும்" என்று சொல்கிறேன்.

எனது சொந்த ஊர் புதுக்கோட்டை மாவட்டம் ராராபுரம். எங்கள் ஊரில் 100 குடும்பங்கள்தான் உள்ளன. அமைதியான ஊர். இந்த ஊரடங்கில் ஆங்காங்கே இளைஞர்கள் கிரிக்கெட் விளையாடுகின்றனர். ஊர் சுற்றுகின்றனர். செல்ஃபி எடுக்கின்றனர். இயக்குநர் விக்னேஷ் சிவனும் இளைஞர்தான். 'சார் சேஃபா இருங்கள்' என்று எனக்கு மெசேஜ் அனுப்பினார். "தம்பி எப்படி இருக்கிறாய்?" என்று கேட்டேன். "எனது தங்கச்சி குழந்தைகள் வீட்டில் இருப்பதால் நான் வெளியில் செல்ல அனுமதியில்லை" என்றார் அக்கறையோடு. அவரைப்போல, தன் மூலம் கொரோனா யாருக்கும் பரவக் கூடாது என்ற நல்லெண்ணம் ஒவ்வொருவருக்கும் வரவேண்டும். அதைத்தான் என் ஊர்க்காரர்களுக்கு சொல்கிறேன்.

**கடவுளிடம் வேண்டிக்கொள்கிறேன்**
**ஸ்ரீ, சின்னத்திரை நடிகர்**



இப்போது ஜிம் இல்லை. அதனால், வீட்டிலிருந்தபடியே ஒர்க் அவுட்ஸ் செய்கிறேன். படம் அதிகம் பார்ப்பதில்லை. பார்ப்பதற்கான மனநிலை இப்போது இல்லை.

எனக்கு கடவுள் நம்பிக்கை அதிகம் உண்டு. என் குடும்பத்துக்காக மட்டுமல்லாமல் எல்லோருக்காகவும் கடவுளிடம் தினம் வேண்டிக் கொண்டிருக்கிறேன்.

நானாவது பரவாயில்லை, எனது அப்பா எப்போதும் பிஸியாகவே இருப்பவர். ஆனாலும், ஒத்துழைப்புக் கொடுக்கிறார். ஏனென்றால், பெரியவர்களுக்குத்தான் அதிகம் பாதிப்பு என்கின்றனர்.

**விழிப்புணர்வு பிரசாரம்**
**விவேக், பாடலாசிரியர்**

குடும்ப உறுப்பினர்களிடமும் தெரிந்தவர்களிடமும் ஏன் தனிமைப்பட்டு இருக்க வேண்டும்? அதன் அவசியம் என்று வலியுறுத்திச் சொல்லி வருகிறேன். வீட்டைச் சுற்றிப் பணிபுரிவோருக்கு சுகாதாரப் பொருட்களை வழங்கிக் கொண்டிருக்கிறோம்.



இது எங்கும் செல்வதற்கான நேரம் இல்லை. வாட்ஸப் வதந்திகளைக் குறிப்பாக நம்பக்கூடாது. அப்படி நம்பிப் பலர் தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். அவர்களுக்கு எல்லாம் விழிப்புணர்வூட்ட வேண்டும். வேலைகள் நிறைய இருக்கிறது.

**விடுமுறையை அனுபவிக்கிறேன்!**
**ரச்சிதா, சின்னத்திரை நடிகை**



தமிழ், தெலுங்கு என்று இரண்டு மொழிகளிலுமே நடித்துக் கொண்டிருப்பதால் மாதத்தின் எல்லா நாளும் எனக்கு படப்பிடிப்புதான். விடுமுறை என்பதே பெரிய விஷயம். இப்போது ஆச்சரியமாக நீண்ட விடுமுறை கிடைத்துள்ளது. அதனால், இந்த ஊரடங்கை குடும்பத்தினருடன் நேரம் செலவிடுவதற்கான வாய்ப்பாகக் கருதுகிறேன்.

சிறு வயது நண்பர்களை எல்லாம் தேடிப்பிடித்து எல்லோரிடமும் காணொளி அழைப்பில் பேசுகிறேன். முன்பும் அதற்கு விரும்புவேன் என்றாலும் அதற்கு இப்போதுதான் நேரம் கிடைத்துள்ளது. குழந்தைகள் விளையாடும் நம்பர் கேம் விளையாடுகிறோம். தினம் உடற்பயிற்சி செய்வது, சமைத்து சாப்பிடுவது, குடும்பத்தினருடன் அரட்டை, செய்தி பார்த்து கொரோனா கொரோனா என்று கத்திவிட்டுத் தூங்குவது என்று நாட்கள் போய்க் கொண்டிருக்கிறது.




# மனோன்மணி மாமிக்கு...!

மனோன்மணி மாமிக்கு மருமகன்
மயில்வாகனன் எழுதும் மடலிது
மனோகரி உங்கள் மகள்
மனமுடைந்து வருந்துவது அறிந்தும்
நானோ இங்கேதும் ஆற்றமுடியாது
நடைப்பிணமாய் முடங்கிக் கிடக்கின்றேன்
வீணோர் அவதூறு பலகூறினும்
விளையாட்டாய்க் கூட அதைனை நம்பாதீர்!

மங்களம் மச்சாளும் கொரோனாவால்
மாண்டதாக மடலில் குறிப்பிட்டிருந்தீர்
தாங்கவில்லையே மாமிமனம் அங்கு
தவிக்கும் உறவுகளுக்கு ஆறுதல் சொல்வீர்
நீங்கள் யாவரும் கூட கவனமாய் இருங்கள்
நீங்காதோ இத்துயரென மண்ணில்
ஏங்கும் நெஞ்சங்கள் பலகோடிமாமி
எளிதில் கிடைத்திடுமோ நிம்மதியிங்கு!

சமத்துவத்தின் மகத்துவத்தை நாமுணர
சதிராட்டம் போடுகின்றது கொரோனா போதும்
இமயம் போல் வல்லமைகள் பெற்றநாடோ
இழிவான வறுமைநிலை உற்றநாடோ
தமக்கான வழிசமைத்த நீர்வளமற்ற நாடோ
தப்பவில்லையே கொரோனாவின் கொடுமைக்கு
நமக்காக ஒருவழி பிறக்குமெனநம்பி
நகர்த்துவோம் வாழ்க்கையினை நாமும்!

தப்பிப் பிழைத்திருந்தால் நாமெலாம்
தக்க தருணத்தில் சேரும் நாள்வரும்
இப்பிற விக்குஇக் கொரோனாபோதும்
இனிவருங்காலம் எப்படியிருக்குமோ? யாரறிவார்
சிப்பிக்குள் முத்தாய் வாழ்ந்திருந்தோம்
சிதறிச் சேற்றுள் விழுந்த முத்தானோமே
செப்பிடமுடியுமா கொரோனாவின் சீற்றம்?
செகமெலாமின்று அதனோட ஆட்டம்!

வீணாக மனம் வருந்துதல் வேண்டாம்
விதியெம்மை ஒன்றாக சேர்த்துவிடும்
தூணாக இருந்து குடும்பம் காப்பதை
தூரத்தில் வாழும் நானுமறிவேன்
ஆணாக இருந்துதான் பேணவேண்டுமெனும்
அவசியமில்லை குடும்பப் பொறுப்புள்ள
பெண்ணாக இருந்தாலுமிது சாத்தியமே
பெருமைக்குரிய பெருஞ்சாதனை மாமியிது!

கனடாவில் வாழுகின்றேன் சில ஆண்டாய்
கருத்தெல்லாம் காசுபணம் சேர்ப்பதில்தான்
ஏனடாயிவன் எங்களை மறந்தானென்று
எரிமலையாய் வெடித்திருப்பீர் நானுணர்வேன்
வீணடா இவனென்றென்னை ஒதுக்கிவிட்டு
வேறரு மாப்பிள்ளை பார்த்திருந்தாலிது
தானடா உறவென்று நினைத்து நானும்
தலைவிதியை நொந்துகொண்டு வாழிந்திருப்பேன்!

இன்னும் சில ஆண்டுகள் கழிந்தால்தான்
இங்குநான் கனடிய குடியுரிமை பெறலாகும்
பொன்னும் மணியும் பூட்டி உங்கள்மகளுக்கு
பொறுப்பான மாப்பிள்ளையாய் ஆனபின்னே
மின்னும் அவள்முகத்தின் அழகைக்காண
மிடுக்கோடு நான்வந்து சேரும்வரை
தின்னும் உணவுஉடலில் ஒட்டாதேமாமி
திரும்பவூர் வருவேன் இப்படிக்கு மயில்வாகனன்!

*கனடாவில் வாழும் மருமகன் இலங்கையில் வாழும் தனது மாமிக்கு கொரோனாவின் கொடுமையால் ஏற்பட்டுள்ள பிரிவுத்துயர் குறித்து எழுதிய கற்பனைக் கவிதை மடல்.*



**கவிஞர் புரட்சிபாலன்**
**வன்கூவர்**

# நிராகரிப்பு...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

அந்த ஆய்வின் முடிவில் நிராகரிக்கப்பட்டவுடன் தான் முட்டாளாக நடந்ததாகத் தன்னைத் தானே நினைக்காமல் தன்னுடைய நான் என்னும் அகங்காரம் அடிபட்டதாகச் சுருண்டு போகாமல் உணர்ச்சி வசப்படாமல் தன் முயற்சியைத் தொடரும்போது அங்கு நீங்கள் நினைப்பதை சாதிக்கக் கூடிய சாத்தியங்கள் அதிகமாகின்றன. நீங்கள் கேட்கக் கூடிய இடத்தில் கிடைக்கா விட்டால் கூட எங்கு கிடைக்கும் அல்லது வேறு எது கிடைக்கக் கூடும் எனக் கூடுதல் தகவல்கள் உங்களுக்கு நிச்சயம் கிடைக்கும் என்று அறிந்துகொண்ட அவன் டாக்டர் David Boven. இன்று உலகின் முன்னணி Rejection Therapist ஆகத் தன் வாழ்க்கையையே உதாரணமாக்கி நிராகரிப்பை நிராகரிக்கப் பலருக்கும் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

முள்ளை முள்ளால் தான் எடுக்க வேண்டும் என்பதுபோல் நிராகரிப்பை நிராகரிப்பால் சீர் செய்யுங்கள் எனும் அவர் ஆய்ந்து அறிமுகப் படுத்திய 'Rejection Therapy' மேலை நாடுகளில் மிகவும் பிரசித்தம். Rejection Proof ஆகச் செயல்படும் இந்தத் தெரப்பி பல நிராகரிப்புகளுக்கு மனதை உட்படுத்தக் கூடிய ஒரு பயிற்சியாக செய்யப்படுவதால் பயிற்சியின் முடிவில் தனிப்பட்ட முறையில் சங்கடம் இல்லாமலே மனம் நிராகரிப்புக்கு தயார் ஆகிவிடுகிறது.

அதனால் ஒருவரால் எந்த ஒன்றையும் கூச்சமோ அச்சமோ இல்லாமல் கேட்க முடியும். தான் கேட்டது கிடைக்காத போது அதைத் தனிப்பட்ட முறையில் எடுத்து உணர்ச்சி வசப்படாமல் ஏன் கிடைக்கவில்லை என எதிர் கேள்வி கேட்கவும் ஏன் அது தனக்கு வேண்டி இருக்கிறது என விளக்கம் கொடுக்கவும் முடியும். அதனால் அது கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகள் அதிகமாகுவதோடு ஒருவேளை கிடைக்கா



விட்டால் அதை எந்த சங்கடமும் இல்லாமல் ஏற்றுக் கொள்ளவும் முடியும்.

நிராகரிக்கப்பட்டு விடுவோமோ என எண்ணும் மனதால் எந்தப் புதிய முயற்சியையும் எடுக்க முடியாது. நிராகரிப்பை நிராகரித்துவிட்டுத் தன் முயற்சியை தொடரும் மனமே பல புதிய சாதனைகளுக்கு வழி வகுக்கும்.

**நிராகரிப்பை நிராகரியுங்கள்!**

# நிராகரிப்பு -Rejection



**மகிழ்ச்சிக்கான தேடலின் தவிர்க்க முடியாத ஓர் அங்கமே நிராகரிப்பு - போ. பென்னெட்**

மீண்டும் ஒரு முறை அவன் தான் எழுதிய கதையை எடுத்து வாசித்துப் பார்க்கிறான். அவனுக்கு மிக மகிழ்ச்சியாக இருக்கிறது. எழுதியது தான்தானா என வியப்பாகக் கூட இருக்கிறது. மிக அருமையாக வந்திருக் கிறது. நிச்சயம் இது பல பரிசுகளை தனக்கு பெற்றுத் தரக்கூடும், அவன் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

மிக்க தன்னம்பிக்கையோடு அந்த பிரசுரத் திடம் தன்னுடைய கதையை கொடுக்கி றான். ஆனால் அது சுவற்றில் அடித்த பந்து போல பல விமர்சனங்களோடு பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளாமல் அவர்களால் நிராகரிக்கப்படுகிறது. அவன் சோர்ந்து போகிறான். அவன் நம்பிக்கை எல்லாம் சுக்கு நூறாக உடைவதை அவனால் உணர முடிகிறது.

அந்த அலுவகத்தில் அல்லும் பகலும் உழைத்து சர்வதேச அளவிலான தன் திட்டத்தை அவன் தன் மேலதிகாரியிடம் போய் கொடுக்கிறான். ஏதோ காரணம் சொல்லி அது ஏற்றுக் கொள்ளப் படாமல் அவனிடமே திருப்பித் தரப்படுகிறது. அவன் மனம் எதையோ இழந்ததை போல் தாழ்வு மனப்பான்மையில் உழல்கிறது.

இதுபோன்ற நிகழ்வுகளைப் பற்றி மேலும் பார்ப்பதற்கு முன்னால் உங்களிடம் ஒரு கேள்வி. நீங்கள் நிராகரிக்கப் பட்டிருக்கிறீர்களா?

நிச்சயம் அனைவருமே ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் நிராகரிப்பை அனுபவித்திருப் போம். ஆனால் அது வெற்றியை நோக்கிய ஒரு மைல்கல் என்பதை மட்டும் பெரும் பாலும் பலரும் உணர்ந்திருக்க மாட்டோம். உண்மையில் நிராகரிப்பை சரியான கோணத்தில் புரிந்து கொள்ளத் தெரிந்தவர்களுக்கு அது ஒரு வரம்.



ஓர்லாண்டோவில் உள்ள ஒரு தொடக்கப் பள்ளியின் ஆசிரியை அன்று வகுப்பிற்கு வரும்போது கை நிறையப் பரிசுப் பொருட்களுடன் வருகிறார். ஆவலாகப் பார்க்கும் சிறுவர்களைப் பார்த்து அவர்கள் ஒவ்வொருவராக முன்னால் வந்து யாராவது ஒரு சிறுவனைப் பற்றி அவனிடம் உள்ள சிறந்த குணங்களைப் புகழ்ந்து கூற வேண்டும் என்று சொல்கிறார். முன்னால் வரும் சிறுவன் யாரைப் புகழ்ந்து சொல்கிறானோ அந்த சிறுவனை அழைத்து ஒரு பரிசை அவனுக்கு கொடுக்கிறார்.

இப்படி ஒவ்வொருவராக வந்து மற்ற சிறுவர்களைப் பற்றி புகழ்ந்து பேசப்பேச புகழப்பட்ட சிறுவர்களை அழைத்து ஒன்றொன்றாகத் தான் கொண்டுவந்த பரிசுகளை வழங்கிக் கொண்டிருக்கிறார். மகிழ்ச்சியும் சிரிப்புமாகக் கடந்து கொண்டிருந்த நிகழ்ச்சி இறுதிக் கட்டத்தை நெருங்குகிறது. அப்போது மூன்று சிறுவர்களைப் பற்றி மட்டும் யாருமே எதுவும் புகழ்ந்து கூறாமல் ஏனைய மாணவர்களால் அந்த மூவர் மட்டும் நிராகரிக்கப்பட்டு நிற்கின்றனர்.

இப்படி ஒரு சூழலை எதிர்பார்க்காத ஆசிரியை, அந்த மூன்று மாணவர்களையும் அழைத்து அவர்களுக்கான பரிசுகளையும் கொடுத்து ஒரு மாதிரி சமாளித்து அனுப்புகிறார்.

ஆனால் நிராகரிக்கப்பட்ட சிறுவர்களில் ஒருவனுக்கு அது மிகவும் வலி மிக்க நிகழ்வாக ஆழ்மனதில் பதிந்து விடுகிறது. சிறுவனுக்கு அப்போது ஆறுவயது தான் இருக்கும் பள்ளியில் நடத்தப்பட்ட அந்தப் பரிசளிப்பு நிகழ்ச்சியில் தான் மொத்தமாக நிராகரிக்கப்பட்டதாக உணர்கிறான். அப்போது அவனுக்கு வலித்தாலும் அது எதிர்காலத்தி லும் தன் செயலாற்றலேயே கட்டுப்படுத்தக் கூடும் என அவன் சிறிதேனும் உணரவில்லை.

ஆனால் பின்னாட்களில் அவன் எந்தப் புதிய செயல்களைச் செய்ய முனைந்தாலும் அவனால் அதைச் செய்ய முடியாமல் தடுமாறும் போதுதான் அவனுக்கு ஒன்று புரிகிறது. சிறுவயதில் தான் நிராகரிக்கப் பட்ட வடு தன்னுள் மிக ஆழமாகப் புதைந்து கிடக்கிறது. நீ நிராகரிக்கப்பட்டு விடுவாய் கவனமாக இரு என அது தன்னை இரகசி யமாக மிரட்டிக் கொண்டே இருக்கிறது என்பது அவனுக்குப் பிடிபடுகிறது. எங்கே தான் நிராகரிக்கப்பட்டு விடுவோமோ என்ற பயமே தன்னை எதுவும் செய்யவிடாமல் தடுக்கிறது. சாதிக்க வேண்டும் எனும் தன் கனவுகளை எல்லாம் தவிடுபொடியாக்கி ஒரு சராசரியாக தன்னை வலம்வரச் செய்கிறது என்பதை உணர்கிறான்.

உடனே அவனுக்குள் ஒரு பொறி தட்டுகிறது. நிராகரிப்புகள் தரும் வலிகளை நிராகரிக்கப் பழகிக் கொண்டால் நிச்சயம் தன்னால் அதிகம் சாதிக்க முடியும் என எண்ணியவனாகத் தன்னையே 'rejection 100 days' என ஓர் ஆய்வுக்கு உட்படுத்து கிறான். அதன்படி ஒவ்வொரு நாளும் யாரோ ஒருவரிடம் ஏதோ ஒன்றைக் கேட்கிறான். அது நிராகரிக்கப்படுவதை தன் மனதின் திடத்திற்குத் தான் அளிக்கும் ஒரு பயிற்சியாக எடுத்துக் கொள்கிறான்.

முதல் நாள் தான் நிராகரிக்கப்படுவதை அவமானமாகக் கருதும் மனம் நாளடைவில் அதை சாதரணமாக, தன் முயற்சியின் வெவ்வேறு கட்டமாக எடுத்துக்கொள்ள அவன் அடுத்த முயற்சிகளைத் தொடர்கிறான். அது அவனுக்குப் பல புதிய முயற்சிகளுக்கு வழி வகுக்கிறது. பல வெற்றிக் கதவுகளைத் திறக்கிறது. சாத்திய மில்லை என இதுவரை நினைத்தவற்றை எல்லாம் எளிதில் சாத்தியமாக்குகிறது.

அதாவது முதலில் நிராகரிப்பை மிக அவமானமாகக் கருதும் மனது அதை வலி இல்லாமல் ஏற்றுக்கொண்டு நிராகரிப்போரை எப்படிக் கையாள்வது என அடுத்த கட்டத்தைப் பற்றி உணர்கிறது. நிராகரிப்பை உணர்ச்சி வயப்படாமல் தன் முயற்சியின் ஒரு கட்டமாகவும் தன் திறமைக்கான சவாலாகவும் எடுத்துக் கொள்கிறது. நிராகரிக்கப்பட்டவுடன் பெரும் அவமானத் தோடு அத்தனையையும் விட்டு விட்டு ஓட எத்தனிக்காமல் நின்று இது எனக்கானது இதை அடைய வேண்டும் என்றால் நான் என்ன செய்ய வேண்டும் என தர்க்கரீதி யாக மனம் முயற்சிக்கிறது என்பதை தன் ஆய்வின்படி அவன் அறிகிறான்.

(தொடர்ச்சி 12ஆம் பக்கம்...)

---



**Math tutorial412**

Answers to tutorial 411

1)d=(24+21_10)/√(36 + 9)

35/3√5 .√5/√5 =7√5/3

2)A plane parallel to the yz plane has directions $\bar{a}$ =(0, 1 0 ) and

$\bar{b}$ =(0 ,0,1 ), this plane passes through the point A(6 ,4 ,2 )

A vector equation is

$\bar{r}$ =(6 ,4 ,2 )+s(0 ,1 ,0 ) +t(0 ,0,1)

3)A plane contains the x-axis and the point A(4 ,-2 ,1 ),O(0 ,0,0) is on the x-axis, therefore a direction is $\overline{OA}$ =(4 ,-2 ,1 ).A second direction is the direction of the x-axis I =(1,0,0)

A normal is $\overline{OA}$XI =$\bar{n}$=(0 ,1,2 ).P(x,y,z) is a point on the plane ,hence $\overline{AP}.\bar{n}$=0.The plane has eqn.

(x-4,y+2,z-1).(0,1,2 )=0

Y+2z =0

Tutorial 412

Questions

1)A bit string of length 10 is formed using two symbols 0 and 1.Of all such strings with exacly six 1s ,what fraction have exactly three 1s in the first five terms?

2)A computer password must have 8 symbols.T hese symbols can be either upper or lower case letters or digits from 0 to 9, and any symbol can be used repetedly (a)How many passwords can be formed?

b)How many passwords can be formed that start and end with a digit?

3)Find symmetric equations of the linethrough the origin that is parallel to the line through the point (4 ,3 ,1) and (-2 ,-3 ,4 )

4)Describe the set of lines in space that have one direction number =0?

ByMrS.F.Xavier(Teacher)6473409490/4167322228

## BASEMENT FOR RENT

**14TH AVENUE & MARKHAM**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, 1Parking, laundry. Close to stores & other all facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **(647) 770-2881**

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, Parking, laundry. Close to all facilities. Avail. July 01, 2020.
தொடர்புகளுக்கு: **416.357.7854**

**MORNINGSIDE & FINCH**
2 Bedroom bsmt for rent. Side entrance & walkout entrance, parking. Close to TTC, School, shopping. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **416.438.3634**

**NEILSON & HWY 401**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, School, shopping. Avail. Immediately.
**416.283.8735 / 647.618.8735**

**MORNINGSIDE & STAINS**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, Close to all facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **647.330.4327**

**MARKHAM RD & STEELES AVE. EAST**
2 bedroom bsmt for rent. Sep. entrance. No parking. Rent is $1,100 per month+utilities. Close to all facilities. Avail. from August.
தொடர்புகளுக்கு:**416.500.9276** Call or text

**MARKHAM & 14Th AVENUE**
2 bedroom bsmt for rent. Sep. Entrance, Parking. Close to 24 hours bus & other all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647-761-8270**

**BRIMLEY & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Working Female or student preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.238.9061**

**MARKHAM & ELLESMERE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. 1 small family or preferably two females. no smoke or no pets. Avail. July 01, 2020
தொடர்புகளுக்கு: **647-675-4799.**

**MCCOWAN & STEELES**
1 Bedroom bsmt apartment for rent. Sep. entrance. Close to walk in 5 minutes to TTC & YRT. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.893.1449**

**MARKHAM & DENISON**
3 Bedroom new bsmt for rent. Sep. entrance, parking. Family preferred. Close to Bus & school. Avail. July 01, 2020
**416.829.3212 / 416.879.9603**

**9TH LINE &16TH AVENUE**
Newly renovated 2-bedroom bsmt for rent. Sep entrance. Parking, laundry. 5 mins to transit, schools. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **(647) 395-5914**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## BASEMENT FOR RENT

**MCCOWAN & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Family Preferred. No smoke or no pets. Close to all facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **416.998.8156**

**HWY 7 & 9TH LINE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. 1 Parking. Close to all facilities. Avail. July 01, 2020.
தொடர்புகளுக்கு: **416.737.1146**

## BASEMENT FOR RENT

**VICTORIA PARK & LAWRENCE**
Large 2-bedroom bsmt for rent. Sep. entrance. All utilities included. In front of a beautiful park, Close to TTC, schools, grocery stores (No Frills), and temple. Looking for a young, working couple, or working women.
Kumar- **416-288-9575/ 647-762-9575**

## BASEMENT FOR RENT

**BRIMLEY & LAWRENCE**
3 Bedroom & 2 washroom bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.885.2860**

## BASEMENT FOR RENT

**KENNEDY & LAWRENCE**
2 bedrooms bsmt for rent. Sep. entrance. Close to TTC subway & stores. No laundry. One car parking. Avail. immediately.
**Contact: 416-371-8101.**

## BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES**
One Bedroom Bsmt for rent. Sep. entrance. Close to all facilities. Avail. immediately.
**Contact:**
**647.648.6240/647.609.2520**

## BASEMENT FOR RENT

**SHEPPARD BETWEEN MCCOWAN**
2 bedrooms basement for rent. sep. entrance, sep. laundry. Steps Away from the TTC & Elementary School. Close to Scarborough Town Center and Centennial College. No Pet.
Contact: **416.904.2844**

## வாடகைக்கு

**4 BR, 3 BR, 2 BR, 1 BR**
**House, Condo, Basement**
வாடகைக்கு உள்ளது
அழையுங்கள்.
**647.861.8240**

## ROOM FOR RENT

**BIRCHMOUNT & LAWRENCE**
1 bedroom + washroom for rent in a condo. Sharing with kitchen & washroom. Close to all facilities.
**Cell: 647-886-2226**

**MARKHAM & DENISON**
1 Room for rent. Rent $550. Parking, Speed internet. Good for a single Bachelor. Close to all facilities. Avail. July 15, 2020.
தொடர்புகளுக்கு: **416.666.6403**

**MARKHAM & 14Th AVENUE**
1 bachelor Bedroom for rent. Parking, laundry, utilities. Close to school, shops, park, & YRT. Avail. July 01, 2020.
**(647) 500-4564 / (905) 472-1370.**

**MIDDLEFIELD & FINCH**
ஐயப்பன் கோவிலுக்கு அருகாமையில் தனி வீட்டில் தனி அறை with தனி washroom உடன் உடனடியாக வாடகைக்கு உண்டு.
**Cell: 416.837.4845**

**DANFORTH & EGLINTON**
1 Room for rent with attached bathroom in main floor. Laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.838.6636**

**ORTON PARK & LAWRENCE**
1 Bedroom for rent. Parking, laundry. Male preferred. No smoking & No drinking. Avail. immediately.
**647.707.0457 / 647.857.9536**

## BASEMENT FOR RENT

**NEILSON & MCLEVIN**
2 bedroom bsmt for rent. Sep. entrance.one parking / laundry Close to school, mall, grocery store, bus stop. Small family or couple preferred Available immediately
**647.909.9529 / 647.770 .3118**

## BASEMENT FOR RENT

**NINTH LINE & 14th AVE.**
2 Room bsmt for rent. Sep. entrance, 1 bathroom, 1 parking, Laundry, No pets. Close to all facilities.
**647.621.4309 / 905.5545.673**

## ROOMS FOR RENT

**MORNINGSIDE & LAWRENCE**
In a 3 bedrooms basement for rent. Each bedroom will be rented separately. Male preferred. Parking, laundry. Close to all Lawrence road & TTC bus stop.
தொடர்புகளுக்கு: **365. 338. 3406**

## உடனடி வாடகைக்கு விற்பனைக்கு

**வீடுகள், கொண்டோக்கள் விற்க, வாங்க வாடகைக்கு விட வாடகைக்கு பெற்றுக்கொள்ள** அழையுங்கள்
**Jey - 416.816.9011**

## HOUSE FOR RENT

**MCCOWAN & EGLINTON**
3 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.201.1222**

**MORNINGSIDE & LAWRENCE**
2 bedroom house 1 washroom, Kitchen, Living room, Double Garage, parking. Close to library, Schools, bus route.
தொடர்புகளுக்கு: **416.994.7849**

**MIDLAND & MCNICOLL**
3 Bedroom & 2½ washroom house for rent. Close to school, Bus, Shops & all facilities. Available Immediately.
**Call : 416-949-5697**

## CONDO FOR RENT

**ELLESMERE & MARKHAM**
1 Bedroom Condo. for Rent. Close to all facilities. Available from August 01, 2020.
தொடர்புகளுக்கு: **647.404.2586**

## CONDO FOR RENT

**MIDLAND & EGLINTON**
Two bedrooms plus dent, One parking One locker room, Two full washrooms. 2 minutes walk from Kennedy station. Avail. July 15, 2020.
தொடர்புகளுக்கு:
**647.201.6075**

## CONDO FOR RENT

**MARKHAM & LAWRENCE**
2 Bedrooms 2 Story Condo House for Rent. Laundry, GYM, Swimming pool. No pets or no smoking. Very close to all facilities. Available July 15, 2020.
**416-573-7275**
**Text or call after 5PM**

## CONDO FOR RENT

**BIRCHMOUNT & HIGHWAY 7**
1 room plus a den condo for rent. Balcony can be used as storage. Garage parking. Close to bank, grocery & other facilities. Bus stop walking distance from the building. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.616.7840**

## வீடு வாடகைக்குபெற்றிட/கொடுத்திட

வாடகைக்கு வீடுகள், Condo., Bsmts போன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட
அழையுங்கள்: **647.402.2937**

மேலும் பக்கங்கள் 15, 16

## ROOM FOR RENT

**KENNEDY & EGLINGTON**

1 Bedroom for rent in 2 bedroom apartment. Living with one person, shared kitchen & bathroom. No pets. Parking is avail. for extra cost. Walking distance to TTC, Kennedy Station, Kennedy GO, groceries. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **(647) 765-4924**

## APARTMENT FOR RENT

**KINGSTON RD & MIDLAND**

1 bedroom apartment for rent . Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு:

**416.880.3636.**

## HOUSE / BASEMENT FOR RENT

**BRIMLEY & STEELES**

3 bedrooms full house for rent. Avail. July 01, 2020. 2 bedrooms & 1 washroom bsmt for rent. Sep. entrance. Close to TTC, School. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.296.7932**

## OFFICE SPACE FOR RENT

**MIDDLEFIELD & FINCH**

Avail. immediately.

தொடர்புகளுக்கு:

**647.296.7932**

## HOUSE FOR RENT

**BRIMLEY & EGLINTON**

**Top Floor:** 3 Bedrooms, 1 Washroom, 1 Kitchen. Family preferred. Close to TTC bus, schools & grocery.

**Please call or message Victor at**

**(647) 406-2999**

## SALE / RENT

**MARKHAM & SHEPPARD**

4 bedroom & 3 washroom house for **Sale.**

**NEILSON & SHEPPARD**

2 bedroom & 2wasroom Houses for **Rent.**

Kannan Kankesu: **416.834.4200**

## HOUSE FOR SALE

**SCARBOROUGH**

**KENNEDY & HWY 401**

3 Bedroom condo apartment with one parking & very low maintenance fee for sale $299,900.00

**AJAX**

**HARWOOD & DREYER**

2 storey, 3 Bedroom, 2 bathroom Condo town house with part finished basement & attached car garage for sale $389, 900.00

**416.917.0557**

**Rajah Masillamany**

**(HomeLife / Future Realty Inc.)**

மேலும் பக்கங்கள் 14, 16

## பராமரிப்பாளர் தேவை

**MARKHAM & FINCH**க்கு

அருகாமையில் வாழும் 77 வயதான பெண்மணி ஒருவரை வீட்டில் இருந்தோ அல்லது பகுதி நேரமாகவோ பராமரிப்பதற்கு பெண் பராமரிப்பாளர் உடனடியாகத் தேவை.

தொடர்புகளுக்கு: **416.562.9275**

## JUNK REMOVAL

பழைய இரும்பு பொருட்கள், **Electronics** பொருட்கள் வீசுவதற்காக வைத்திருந்தால் இலவசமாக எடுக்கப்படும்.

**MOVING / DELIVERY AVAILABLE.**

தொடர்புகளுக்கு: பிறேம்-**647.835.5244**

## AZ DRIVERS WANTED

Amero Logistics Inc. is currently hiring experienced AZ drivers for Toronto to Montreal run. Also AZ city drivers for local work in GTA.

Need 1-year experience and clean CVOR and abstract. Weekly Pay .

For more info call : **647.274.0300**

## TAILORING

**SCARBOROUGH**இல்

Saree Blouses $25க்கு தைத்துக் கொடுக்கப்படும்.

**V G Tailors:**

**647.621.3694**

## மணமகன்கள் தேவை

இலங்கை யாழ்ப்பாணத்தில் வாழும் இந்து வேளாளர்குல, 1987இல் பிறந்த 12இல் செவ்வாய் உள்ள மணப்பெண்ணுக்கும், 1988இல் பிறந்த 4இல் செவ்வாய் உள்ள மணப்பெண்ணுக்கும் கனடாவில் மணமகன்களை தேடுகின்றோம்.

KarunTharuma: **416.407.7787**

**WhatsApp : +1 416.407.7787**

**karunntk@gmail.com**

## திருமணசேவை

திருமண சேவைக்கு

தொடர்பு கொள்ளவும்

**905.607.3896**

## ஶ்ரீசாயி திருமண சேவை

உங்கள் பிள்ளைகளுக்கு பொருத்தமான வாழ்க்கைத் துணையை தேடிக்கொள்ள எங்கள் சேவையை நாடுங்கள். பல துறைகளில் தகுதி பெற்ற மணமகன், மணமகள் உள்ளனர்.

**416.890.6497**

**srisai2912@hotmail.com**

## வாகன போக்குவரத்து

விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்ட தூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு

அழையுங்கள்: **416.880.5952**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## BASEMRN FOR RENT

**MORNINGVIEW TRAIL & OLD FINCH**

2 Bedroom & 2 Washroom bsmt for rent. Separate Entrance & Separate Laundry. Near School ,Park 2 minute work TTC & daycare. Priority family or Couples. Avail. immediately.

**Contact: Suthan 416.473.4200**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & STAINES**

2 Rooms For Rent in a walkout basement. Ladies only. Close to all facilities. Avail. July 01, 2020.

தொடர்புகளுக்கு: **647.888.9437**

## SHORT TERM HOUSE RENT

**Location : 5659 Gilmore Road, Newtonville, Clarington, ON**

1 acre land with fully furnished 5 bedroom bungalow house for short term rent**.** Hot tub, swimming pool, two soccer field, sports items, campfire patio with BBQ & Fully equipped kitchen items

**Contact: P. Pirathapan 416.875.4119**

## COOK அல்லது KITCHEN HELPER தேவை

**Oshawa**வில் அமைந்துள்ள **(bonn & simcoe) Restaurant**க்கு **Cook** அல்லது **Kitchen Helper** உடனடியாகத் தேவை.

மேலதிக விபரங்களுக்கு: Rajah **647.271.7975**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**PRK DOOR & WINDOWS**

தொழிற்சாலை மரவேலையில் அனுபமுள்ள தொழிற்சாலைக்கு மரவேலையில் அனுபவமுள்ள தொழிலாளர்கள் தேவை.

தொடர்புகளுக்கு: **416.875.4119**

## HELP WANTED

**Delft Interlock Specialist Inc.**

Needs employees for manual labour (landscaping) Targeted for those between the ages of 20 - 40 Payments vary, details can be worked out over a phone call Call by deadline date: July 01st 2020.

Contact info: **Kannan Ramanathan**

Contact Number: **(416) 828-5086**

# FOR RENT - CONDO/HOUSE / BASEMENT
# WATSON PROPERTY MANAGEMENT - 416-284-9999

* Scarborough - Ellesmere / Military trail – Bsmt
Room For Students Near U Of T Scarborough. Furnished Room Available. Everything Included. 5 Minutes Walk To U Of T / Centennial College. [Asking $520/m]

* Scarborough – Ellesmere Rd / Military trail – Bsmt
2 Rooms Available for Students Or Professional. Near U Of T Scarborough / Centennial College. Close to Ttc & Hwy 401. [Asking each- $560/m]

*Scarborough Morningside / Sheppard – Detached – Rooms
One Room available for Female Students or Couples. Close To Scarborough U Of T, Centennial College, Pan Am Ctr, Hwy 401, Hospital. [ Call 647-913-9241]

Bowmanville – Hwy 401 / Hwy 2 – Detached – House
Furnished large home with 4 or 6 Bedroom Available For Short & Long Term Rent.[ Call 647-913-9241]

*House for Sale in Jaffna – Near Kacheri, St.johns College, Chundikuli.High demand rental area. Well maintained house in a Land about a quarter Acre. CDN-$200,000.Clear Title. Call Karu 416-616-7278

*Scarborough - Mccowan / Ellesmere – Bungalow – Bsmt
(2 Brm + 1 Bath) Separate Entrance. 2 Parking spaces. Near U Of T Scarborough / Centennial College. Close to Ttc & Hwy 401..[ Asking $1500/m]

* Scarborough – Markham / Birchmount – Condo Apt
Once bedroom Condo Unit available. Great Location. [Asking $2000/m]

* Scarborough– Kingston / Lawrence – Bungalow –Main Fl
(3 Brm + 1 Bath) Spacious Main Floor. Mins To Hwy 401. [Asking $2200/m]

*Scarborough – Ellesmere / Morningside – Condo Apt
(2 +1 Brm + 2 Bath) Great Location. 1 Parking. Close To U Of T Scarborough / Centennial College. Close to Ttc & Hwy 401 [Asking $2600/m]

* Scarborough – Brimley / Ellesmere – Condo Apt
(2 Brm + 2 Bth) Open Concept. 1 Parking. Walk to Ttc. Rt, Scarborough Town Ctr, Close To 401.[Asking $2350/m]

## வீட்டு முதலீட்டாளர்களுக்கான கருத்தரங்கு

- வாடகைக்கு விட சரியான வீட்டை எப்படி தெரிந்தெடுப்பது.
- அந்த வீடுக்கான கடனை எப்படிப்பெறுவது.
- சரியான வாடகையாளர்களை எப்படி கண்டுபிடிப்பது.
- அந்த வீட்டை சரியாக எப்படி நிர்வகித்து கூடிய லாபம் பெறுவது.

இதற்கான கருத்தரங்கில் கலந்துகொள்ள விரும்புவர்கள்

தொடர்பு கொள்ளவும்: கரு கந்தையா: 416-284-5555
watsonpm1989@gmail.com

## SEMINAR FOR INVESTORS

- How to select the right property to buy as an investment?
- How to qualify for mortgage for those properties?
- How to find the right tenant?
- How to manage the property to get high net income?

If you are interested contact us for more details! Limited Seats!

Contact: Karu Kandiah: 416-616-7278
watsonpm1989@gmail.com

# MANAGING RESIDENTIAL PROPERTIES
watsonpm1989@gmail.com

# முதலீட்டாளர்களே! நீங்கள் ஓய்வெடுங்கள்!!
## உங்கள் வீட்டை வாடகைக்கு கொடுத்து பராமரிக்கும் வேலையை நாங்கள் செய்து தருவோம்!!

எமது சேவைகள்:

- வீட்டின் சரியான வாடகையைத் தீர்மானிப்பது.
- வீட்டைச் சந்தைப்படுத்தி அதை விசாரிப்பவர்களுக்கு மேலும் தகவல் தருவது.
- தகுதியான வாடகையாளர்களை கூட்டிச் சென்று வீட்டைக் காட்டுவது.
- வாடகைக்குப் பெற விரும்புவோரின் வேலை வருமானம், நம்பகத்தன்மை என்பவற்றை உறுதி செய்து கொள்ளுதல்.
- தகுதியான வாடகையாளருடன் வாடகை ஒப்பந்தத்தை செய்து கொள்ளுதல்.
- வாடகையாளர் குடியேற முன்னரும் பின்னரும் வீட்டின் நிலையை கவனித்துக்கொள்ளுதல்.
- சரியான திகதியில் வாடகைப்பணத்தை அறவிட்டு வீட்டுரிமையாளரின் வங்கிக்கணக்கில் வைப்பிலிடுதல்.
- பிரச்சனை தரும் வாடகையாளர்களை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபடல்.
- வீட்டில் திருத்த வேலைகள் தேவைப்படும் போது அதில் அனுபவம் வாய்ந்தவர்களை அனுப்பித் திருத்தும் முயற்சியில் ஈடுபடல்.
- வருட முடிவில் அந்த வீட்டின் வரவு செலவுக் கணக்கை உரிமையாளர்களுக்கு ஒப்புவித்தல்.
- வாடகை ஒப்பந்தத்தை புதுப்பித்தல்.
- வருடாந்த வாடகை அதிகரிப்பை அறிவித்தல்.
- வீட்டின் பெறுமதியில் ஏற்ற இறக்கத்தை அறிவித்தல்.
- திரும்பவும் வீடு உங்களுக்குத் தேவைப்படும் போதுசரியான வழிமுறை களைக் கையாண்டு பெற்றுத்தரல்.
- வாடகைக்கு விடக்கூடிய குறைந்த விலையிலுள்ள வீடுகளை கண்டுபிடித்து வாங்க உதவி செய்தல்.
- வாடகைக்கு விடுவதற்கு வீட்டில் என்ன திருத்த வேலைகள் அவசியம் என்று அறிவுரை வழங்குதல்.

# You can relax while we take care of your investment property!

WATSON PROPERTY MANAGEMENT LTD

Direct: 416-284-9999
WatsonPM1989@gmail.com
80 Corporate Drive, Unit 207
Scarborough, ON, M1H 3G5



Karu Kandiah Director
30+ Years in Real Estate

# தகவல் தொழில் நுட்பத்தில் கனடாவில் தமிழரின் பங்கு

– சா. சிவபாக்கியராசா –

பூமிப் பந்தின் பூகோள அமைப்பினையும் பிரபஞ்சம் முழுவதையும் முழுமையாய் ஆக்கிரமித்து, விஞ்ஞான விருத்தியின் அடித்தளமாய் அமைந்தது தகவல் தொழில் நுட்பத்தின் அதிஉயர் வளர்ச்சிதான் அடிப் படைக்காரணிகள். இதில், தமிழரின் பங்களிப்பு எங்கே? எப்போது? ஆரம்பிக் கிறது என ஆய்வு செய்தால், நாள்காட்டி, நாளிதழை, நாம் புரட்டிப்பார்த்தால், புகலி டம் தேடி, புலம்பெயர்ச்சிக்குள்ளாகி, நாடு நாடாயோடி ஏதிலிகளாய் குடிவரவாளர் களாய், கனடிய நாட்டிற்குள் காலடி பதித்த காலம் முதல் தமிழரின் அரசியல்சார்புடைய அத்தியாயம், சிங்கள அதிகார வர்க்கத்தின் அடாவடித்தனத்தால், மனையிழந்து, மனைவியையுமிழந்து, ஊரிழந்து, உறவி ழந்து, பொன்னிழந்து, பொருளிழந்து, பொருளாதாரம் சீர்குலைந்து போக்கற்றுப் போன மனநிலையில் தளர்ச்சியுற்று விரக்தியின் விளிம்பில் கல்வி கலாச்சார பண்பாட்டிற்கும் மதவழிபாட்டிற்கும் மறு தலிப்பு ஏற்பட்டு, 83களில் கறுப்பு யூலை கலவரத்தோடு ஆரம்பமாகிறது. தகவல் தொழில் நுட்பத்தில் தமிழரின் பங்களிப்பு அன்றிலிருந்து இன்றுவரை படிப்படியாய் உச்சநிலை பெறுகிறது.

கனடாவில் மட்டுமன்றி உலகின் எட்டுத் திசைகளிலும் புகலிடம் தேடிப் புலம் பெயர்ந்து புறப்பட்டோர் "கண்ணைக் கட்டி காட்டில் விட்டதுபோல்" கடல் கடந்து அந்நியர் மண்ணில் காலடி பதித்து நின்ற போது, இம்மண்ணின் புவியியல் சார்புடைய தகவல்களோ, சுவாத்திய வேறுபாடுகளோ, அவற்றினால் ஏற்படும் மாற்றங்கள், பாதிப்புக்கள், நாட்டின் அரசியல், பொருளா தாரக் கட்டமைப்புக்கள், சட்ட வரைவுகள். மூலவளங்கள், பொருளீட்டும் வழிவகைகள், வாழ்க்கை வசதிகள், இயற்கை அன்னை இந்நாட்டிற்கும் வாரி வழங்கியிருக்கும் நீர் வளம், நிலவளம், லட்சக்கணக்கான நன்னீர் ஏரிகளால் நிரம்பி வழியும் வளம் கொளிக்கும் பூமியிதுவென்றோ? உலகிலேயே "மீன்களின் சுவர்க்கம் இது" என வர்ணிக் கப்படும் இந்நாட்டின் மீன்வளம், விவசாயத் தில் நம்மவர்கள் கற்பனையில் கூடக் கண்டிராத கோதுமை, சோளம், சோயா, நிலக்கடலை போன்ற தானிய உற்பத்தியில் பொன்விளையும் பூமியிதுவென்றோ! அப்பிள், திராட்சை, ஸ்ரோபெரி போன்ற பழவர்க்கங்களால், பூத்துக் குலுங்கும் பூக்களால் சுவர்க்கமாய் காட்சி தரும் பூமியிதுவென்றோ!

ஆடு, மாடு, கோழி, குதிரையென பலவகை கால்நடைகள், பறவையினங்களின் வளமான வாழ்விடம் இதுவென்றோ! இன்னோரன்ன இதுபோன்ற தகவல்களை, எதனையும் தெரிந்திராமல் இந்நாட்டிற்குள் வந்தோர்க்கு, என்ன வளமில்லை இந்த நாட்டிலென்றும், இதோ பார் எண்ணைவளம், காட்டுவளம், கனிமவளம் என எண்ணற்ற வளங்களால் நிரம்பியிருக்கும் நாடு இதுவென்று தெரிவித்ததும், இயற்கையின் சீற்றமும், கடும் குளிரும், நிறை பனியும் இதுபோன்ற இன்னல்களும் முதன்மை பெற்றுத் தெரிந்திருந்த எம்மவர்க்கு, கண்களைத் திறந்து, காட்சிப் பொருளாக்கி, பொன் கொழிக்கும் பூமியிதுவென்றும் இயற்கை வளங்கள் இதோ இதோவென்றும் எழுத்துக் குள் ஏட்டிற்குள் வானொலியில், காணொளி யில் புகைப்படமாய் புதுப்புது விந்தைமிகு விஞ்ஞானத் தொழில்நுட்பங்கள், ஊடகங் கள். அனைத்தையும் உள்வாங்கி, நாளாந்த வாராந்த மாதாந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள், இசைத்தட்டுக்



கள், சிடிகள், வீடியோக்கள் அத்தனையும் அச்சு இயந்திரத்தில் எலக்ரோனிக் டிஜிற்றல் என அதியுயர் தொழில்நுட்பங்கள் அனைத்தையும் உள்வாங்கி, அறிஞர்களின் படைப்புக்கள், அறிவுக் களஞ்சியங்கள் அத்தனையும் அழகிய படங்களுடன் அழகழகாய் அச்சிட்டும் வெளிக்கொணரும் தகவல் தொழில்நுட்பத்தில் தமிழர்களின் பங்களிப்பு தரணி போற்றி நிற்கிறது. நான்கிற்கும் மேற்பட்ட வானொலி நிலையங்கள், நாள்தோறும் தொடரலை யாய் ஒலியலையாய் வெளிக் கொணரும் வானொலிகள் நான்கிற்கும் மேற்பட்ட காணொளிகள், தொலைக்காட்சிப் பெட்டிக் குள் நுழைந்து விடும். தொலைக்காட்சி நிலையங்கள், கணினி மயமாக்கி கணப் பொழுதில் கண்முன்னே கொண்டுவரும் வலையத்தள இலத்திரனியல் தொழில் நுட்பச் சாதனங்கள். அத்தனையும் உள் வாங்கும் தகவல் தொழில்நுட்பம் தரணி போற்றி நிற்கிறது. வாராந்த மாதாந்த செய்தித்தாள்கள், பகலிரவாய் பதிப்பிட்டு இலவசமாய் தந்துதவும் தொழில்நுட்பம், கண்ணுக்கும் காதுக்கும் களிப்பூட்டி சிந்தனைகள் சிறகடித்து சிந்திக்கத் துணை புரிந்தும் இயல்வடிவில், இசைவடிவில் இதமாகக் கொண்டு வந்தும், விஞ்ஞானம், விவேகம் தொழில்சார் தொழில்நுட்பங்கள், உலகளாவிய தகவல்கள் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், அறிவுலகம் சுமந்துவரும் அரும்பெரும் அறிவுக்களஞ்சியங்கள், சுடச் சுட திரட்டித்தரும் தொழில்நுட்பச் சாதனங்கள், தாயக உறவுகளைக் கண் முன்னே கொண்டு வந்தும், புலம்பெயர் தமிழருக்கு கனடிய அரசு வழங்கி வரும் உதவிகள், ஊடகங்கள். மனிதநேயச் செயல்பாடுகள் அத்தனையும் தினம் தினம் திரட்டித் தகவலாகத் தந்துதவும் தகவல் தொழில்நுட்பத்தில் தமிழரின் பங்களிப்பு பாராட்டுக்குரியது.

ஆகாயம் அண்டவெளி, அறிவுலகம் அத்தனையும் மூலை முடுக்கெல்லாம்

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)

## EDUCATION

### Review Questions 20-13

➤ **BIOLOGY**

(i) Chemical analogues that mimic the structure of nucleotides incorporated into DNA and prevent DNA polymerase from building a complementary strand during DNA replication.

Explain why this is an effective method in treating the growth of cancer cells? Explain side effects of this method.

(ii) State viruses are not considered in any of the five-kingdom system.

➤ **MATH**

John makes a pet box by cutting off squares with sides x cm in length . The dimensions of the solid rectangle are 20cm by 30cm. The volume of the box is 1008 $cm^3$.

(i) Determine an equation that models this situation.

(ii) Determine the value of x.

➤ **PHYSICS**

(i) A ball is dropped from the roof of a high building. A second ball is dropped 2.0 s later. How far apart are the balls when the second ball has reached a speed of 19.6 m/s.

(ii) An object is thrown vertically upward from a height of 10m above the ground. At the same instant, another object is released along a friction less ramp. The two objects reach the ground at the same time, and both have a final speed of 25 m/s. What is the angle of the ramp.



**ADVANCED FUNCTION**

Create a function of the form of $f_{(x)} = \frac{P_{(x)}}{Q_{(x)}}$

Where $P_{(x)}$ is a cubic function and $Q_{(x)}$ is a

Quadratic function. The function $f_{(x)}$ is to have a removable discontinuity at x= 2, and a vertical asymptote at x = 2 and an oblique asymptote of y = 2x + 1. When you perform a long / synthetic division on $\frac{P_{(x)}}{Q_{(x)}}$, the remainder is 1. Sketch a graph of the function with all key features labelled.

Zoom -
ONLINE TUTORING
☎ 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj
KEEN TUTORING CENTRE

### Answer Key : 20-13

➤ **BIOLOGY**

(i) Cancer cells rapidly dividing and abnormally reproducing. Cell division occurs followed by DNA replication.

- Chemical analogues that mimic the structure of nucleotides will prevent DNA polymerase and therefore the DNA replication will be prevented.
- Thus cancer cells won't be able to reproduce/ further division.

(ii) Viruses do not reproduce, do not have structures such as cellular membrane or cell organelles.

viruses contain genes made of either DNA or RNA but not made of cells- no cell membrane, nucleus, or cytoplasm. no metabolic apparatus and do not digest, respire, and so on. can reproduce but only inside a host.

**MATH**

$f(x) = x(30- 2x)(20- 2x)$;

$x$ = 3cm or 4.92cm

**PHYSICS 11 & 12**

(ans=78.4m -19.6m = 58.8m)

**ADVANCED FUNCTION 12**

$$f_{(x)} = \frac{2x^3 + x^2 - 8x - 3}{x^2 - 4}$$

# ஆழியவளை

**தொடர் கட்டுரை**

## யாழ்ப்பாணத்துக் கடலோரக் கிராமம் ஒன்றின் மரபும் மாற்றமும்

கந்தசாமி முத்துராஜா

### இ. தூண்டில்

தூண்டில் மீன்பிடியில், 'கைக்கிட்டம் என்பது தனிநபர் ஒருவர் கரையில் நின்றுகொண்டு அல்லது கட்டுமரத்தில் சென்று, தங்கூசியில் தூண்டிலைப் பொருத்தி அதில் இரையைக்குத்தி வீசி எறிந்து மீன்பிடிக்கும் ஓர் உத்தியாகும். 'தூண்டில் வலை' என்பது, மிகவும் நீளமான பலம் கொண்ட நூற்கயிற்றில் ஏறத்தாழப் பத்து அடிக்கு ஒரு தூண்டிலாக நூற்றுக் கணக்கில் தூண்டில்களைப் பொருத்த அவற்றில் இரையைக் குத்தி, ஆழக்கடலில் படுக்கவிட்டுப் பெரிய மீன்களைப் பிடிக்கும் இன்னொரு உத்தியாகும்.இதில் ஆமை, ஆனைத்திருக்கை, வேளாச்சுறா போன்ற மிகப்பெரிய ஆழ்கடல் மீன் வகைகளும் பிடிபடும்.

கட்டுமரத்தில் ஏற்றமுடியாத மிகப்பெரிய 'கடல்மிருகங்களை' கட்டுமரத்தின் பின் பக்கத்தில், கம்பான் கயிற்றினால் தொடுத்து நீரில் மிதக்க விட்டு இழுத்துக் கொண்டுவந்து கரைசேர்ப்பர். சிலவேளைகளில் 'கடியன்கடித்து' தூண்டில்வலை அறுபட்டுச் சிதைவுறுவதுமுண்டு. சிலநாட்களில் மீன்கள் பிடிபடாமையினால் வெறுங் கையுடன் கரை திரும்புவதும் நடைபெறும். இத்தகைய சுவையான நிகழ்ச்சிகளைக் கூறும் அகநானூற்றுப் பாடற்பகுதியை ஈண்டுக் காட்டுதல் பொருத்தமானதாகும்:

"திண் திமில்,
எல்லுத் தொழில் மடுத்த வல்வினைப் பரதவர்
கூர் உளிக் கடுவிசை மாட்டலின், பாம்பு உடன்
கோட்சுறாக் கிழிந்த கொடுமுடி நெடுவாலை
தண் கடல் அசைவளி எறிதொறும், வினைவிட்டு
முன்றில் தாழைத் தூங்கும்"
(அகம் 340: 18-23).

(திண்ணிய படகுகளில் போய்த் தம் பகற்பொழுதிற்குரிய தொழிலை மேற்கொண்ட கொடுந் தொழிலையுடைய நெய்தல்நில மக்கள், கடிய காற்றின் மிக்க விசையுடன் செல்லுதலால், கொலைத் தொழிலையுடைய சுறா மீன்கள் ஒன்றாய்க் கூடிக் கிழித்தலால், கிழிபட்ட வளைந்த முடிகளையுடைய வலைகள் தொழில் ஒழிந்து கடலில் இருந்து குளிர்ந்த காற்று வீசுந்தோறும் வீட்டின் முற்றங்களில் வளர்ந்துள்ள தாழை மரத்தின்மீது அசையும்.) (மாணிக்கனார், அ.2001: 134). 'வளைந்த முடிகளையுடைய வலைகள்' என்பது தூண்டில் வலையைக் குறிப்பதாகத் தெரிகிறது. நான்கு அல்லது ஐந்து



மரக் குற்றிகள் பிணைத்துக்கட்டிய சுமார் பதினெட்டு அடி நீளமான பெரிய கட்டு மரங்களில் பாய் பொருத்திக் கரைமறைந்த பின்பும் நீண்டதூரம் ஆழிக்கடல்சென்று, சில தூண்டில்வலை படுப்பர். திடீரெனக் காற்று ஓய்ந்துவிட்டால் சவள்களினால் வலித்து மிகவும் கஷ்டப்பட்டுப் பல மணித்தியாலங்களின் பின்னரே கரை சேர்வர். சிலர் சிறிய கட்டுமரத்தில் பாய் பொருத்தித், தனியொருவராகத் தூண்டில் வலை படுக்கச்செல்வர். இத்தொழில் முயற்சியில் ஈடுபட்டுச் சீவிப்பவர்களையும் 'தனித்தொழில்காரர்' என்றே அழைப்பர். இவ்வாறு மரபுவழிவந்த தூண்டில் தொழில், தற்காலத்தில் நவீனத்துவம் பெற்றுள்ளமை கண்கூடு.

### ஈ. கரைவலை

கரைவலை என்பது ஆழக் கடலுக்குச் செல்லாது, கரைப் பகுதிக்குள்ளேயே பலர் கூடி வலைபடுத்து மீன்பிடிக்கும் முறையைக் குறிக்கும். கடற்கரையின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வலையின் ஒரு தொங்கலைப் போட்டுவிட்டு வள்ளத்தில் படிப்படியாக மேலே, ஏறத்தாழ முந்நூறு யார் அளவு தூரம் சென்று அரைவட்ட வடிவில் வரையைப்படுத்துப் படுத்து வந்து கரையின் இன்னொரு இடத்தில் மற்றத் தொங்கலைக் கொண்டுவந்து விடுவர். இரண்டு தொங்கலுக்கும் இடைப்பட்ட தூரம் ஏறத்தாழ இருநூறு யார் எனலாம். ஒவ்வொரு தொங்கலிலும் ஏறத்தாழப் பத்து பத்துப் பேர் நின்று அம்பா பாடிப் பாடி வலையை இழுப்பர். பலமாக நின்று வலையை இழுப்பதற்கு ஏற்றவகையில் இடுப்பில் வார்போன்ற ஒரு பின்னப்பட்ட கயிற்றை வலையில் பூட்டி இழுப்பர். ஒவ்வொரு பக்கத்திலும் நிற்கும் ஒவ்வொரு வரும் இந்த வார்க்கயிற்றைக் கட்டியிருப்பர். இந்த வார்க்கயிறு 'உறிக் கயிறு' என்று சொல்லப்படும். இவ்வாறு வலையை இழுத்தல் சிரமமான ஒரு முயற்சியாகும். மீன்கள் வருகின்ற பாடு அறிந்தே வலையைப் போடுவர். இந்த வலைபோடும் முறையை வலை வளைத்தல் என்பர். வலையைப் படுத்துக் கொண்டு செல்லும் வள்ளத்தை மண்டாடி நெறிப்படுத்துவார். இருபக்கமும் கரையில் நின்று இழுப்போர் வலை மேலே வரவரக் கரையின் மேலே செல்லாது மீண்டும் கடலடிக்குச் சென்று இழுத்து வருவர். இவ்வாறு இரண்டு பக்கத்தினரும் இழுக்கும் பொழுது படுக்கப்பட்ட வலையினுள் மீன் படுவதற்கு ஏற்ற முறையில் இருபக்க வலையைச் சமனாகவே இழுத்தல் வேண்டும். ஒன்று முந்தி மாறிப் பக்கம் பிந்தி என்றால் மீன்கள் வழுவிப்போய் விடும். இவ்வாறு இழுக்கும்பொழுது நல்ல முறையில் மீன்படுமேல் ஏறத்தாழ ஐநூறு இறாத்தல் முதல் ஆயிரம் இறாத்தல் வரைகூட மீன் பிடிபடலாம்.

தூர்மடி கரைக்குக் குறுகுவதற்கு ஏறத்தாழ இரண்டுமணி நேரமாவது எடுக்கும். இம்முயற்சியில் சில ரூபாய்க்கும் மீன் பிடிபடும். பல ஆயிரம் ரூபாய்க்கும் மீன் பிடிபடும். கரைவலையின் முதலாளியைச் 'சம்மாட்டி' என்றும், கரைவலையை நடத்தும் தலைமைத் தொழிலாளியை 'மண்டாடி' என்றும் அழைப்பர்.

தொழிலாளருக்கு மூன்றுநேரச் சோறும் 'சம்மாட்டிமார்' தாம் விரும்பியவாறு, மாதச் சம்பளமும் வழங்குவர். சம்மாட்டியைக் கட்டுப்படுத்துவதற்கு எவ்வித அரச சட்டமும் நடைமுறையில் இல்லை. சில சம்மாட்டிமார் சிறு சம்பளத்தைக் 'கிள்ளித்' தெளிப்பர். பெரும்பாலான 'கூலிகள்' எந்தக் காலமும் சம்மாட்டிக்குக் கடன்காரர் களாகவே இருப்பர். இப்பின்னணியைச் சித்தரிக்கும் தார்சீசியஸின் 'பொறுத்தது போதும்' என்ற மேடைநாடகம் (1980) பிரபல்யமானது. சம்மாட்டி இலட்சாதிபதியாகும்போது தொழிலாளர் என்றைக்கும் கூலிகளாகவே காணப்படுவர். தற்போது சில சம்மாட்டிமார் வருமானப்பங்கீடு செய்கின்றனர். இம்முறையில் வருமானத்தின் மூன்றில் ஒரு பங்கு சம்மாட்டிக்கும், ஏனைய இரு பங்குகளைத் தொழிலாளருக்குச் சரிசமமாகவும் பங்கிடுவர். இதிலும் சம்மாட்டிக்குத் தொழிலாளர் பங்கு ஒன்று வழங்கப்படும்.

கரைவலைத்தொழில் கோடைகாலச் சித்திரை மாதத்தில் ஆரம்பித்து, ஐப்பசி மாதத்தில் வலைவைத்துக் 'கூடு' கட்டுவர். வள்ளத்தை நீளமான அம்பறாக கூட்டினால் மழை புகாதபடி மூடிக் கட்டுவர். வலையை மிகவும் பாதுகாப்பாகக் குடில்களினால் மூடிக்கட்டி வைப்பர். அந்த ஆண்டிற்கான கோடைத்தொழில் நிறைவுறுதலைக் 'கூடுகட்டுதல்' என்னும் தொடர் குறித்துக் காட்டுகின்றது. கூடுகட்டிய பின்னர் சில தொழிலாளர், அப்போதைக் கப்போது சம்மாட்டிமாருக்குத் 'தொட்டாட்டி வேலை'களைச் சரீர உதவியாகச் செய்து கொடுப்பதும் வழக்கம். மாரி காலத்தில் சம்மாட்டிமார் சுகபோகம் அனுபவிக்கும் அதேநேரம் உழைத்துக் கொடுத்த கூலித்தொழிலாளரின் குடும்பம் வறுமையில் வாடுவதும் இயல்பாகும். உண்மையிலே, இந்தக் கூலிகள் தங்களின் 'வயிற்றைக் கழுவினால்' போதும் என்ற நிலையில்தான் கோடை காலத்தில் கொடிய வெயிலுக்குள் சம்மாட்டிமாரின் கரைவலையைக் கட்டி இழுத்தனர். மனைவிமார் ஏதாவது கூலித்தொழிலோ மீன் வியாபாரமோ செய்தும், கணவன்மாரின் அற்ப சொற்ப சம்பளத்தைக் கொண்டு கோடைச் சீவியத்தை நடத்துவதும், இவ்வூரின் வாழ்க்கை முறையாக இருந்தது.



'கரைவலை' என்பது, பலர்சேர்ந்து செய்யும் ஒரு கூட்டு முயற்சியாகும். இத்தொழில், சங்க காலத்திலிருந்து பாரம்பரியமாகத் தொடர்ந்து வருகின்றது என்பதைப் பின்வரும் அகநானூற்றுப் பாடல் தெரியப்படுத்துகிறதுபோல இருக்கின்றது.

உயர் நெடுங்களிறு வலந்த குறுங்கண்
அவ்வலை
கடல்பாடு அழிய இனமீன் முகந்து
துணைபுணர் உகையர் பரத மாக்கள்
இளையரும் முதியரும் கிளையுடன் துவன்றி
உப்பு ஒய் உமணர் அருந்துறை போக்கு
5
ஒழுகை நோண்பகடு ஒப்பக் குழீஇ
அயிதிணி அடைகரை ஒலிப்ப வாங்கி
பெருங்களம் தொகுத்த உழவர் போல
இரந்தோர் வறுங்கலம் மல்க வீசி
பாடுபல அமைத்து கொள்ளை சாற்றி
10
கோடு திணிமணல் துஞ்சும் துறை!
(அகம் 30: 1-11)

"நெய்தல் நிலப் பரத மக்கள் இளையவரும் முதியவருமாய் வலிய எருதுகளைப் போல் ஒன்றாய்க்கூடுவர். கடலின் பேரொலியும் அடங்கும்படி ஆரவாரம் செய்து, நீண்ட கயிற்றால் பின்னிய குறுகிய கண்களையுடைய வலைகளை வீசிப்பலவகையான மீன்களைப் பிடிப்பர். மணல்மிக்க கரைகளில் அம்மீன்களை ஒலி உண்டாக இழுப்பர். பெரிய நெற்களத்தில் குவித்த உழவர்களைப்போலத் தம்மிடம் வந்து இரந்தவர்களின் வறிய பாத்திரங்கள் நிறைய அம்மீன்களைத் தருவர். எஞ்சிய மீன்களைப் பல கூறுகளாகச் செய்து விலைகூறி விற்பர். பின் கரை உயர்ந்த திண்ணிய மணற்பரப்பில் உறங்குவர்" (மாணிக்கனார், அ. 2000:188).

# புதிய..

19ஆம் பக்கத்தொடர்ச்சி

நினைவுக்கு வந்தன. கிழக்கு ஜேர்மனியில் Georg Dreyman என்ற நாடக ஆசிரியர் மீதான அரசின் வன்முறைகள், விசாரணைகள் நடைபெறுகின்றன. அமர்நாத்தும் திட்டமிடப்பட்டு தொடர்ச்சியாக சிந்தனைப் பொலிஸினால் உளவியல் தாக்குதலுக்கு உள்ளாகின்றார். மறுபுறம் ஹிட்லர் போன்றோரின் உதவியுடன் அரசு, தனது எதிரிகளை அமைதியாக்குகின்றது. "ராமர் கோயில் கட்டினால் மூலதனம் பெருகும் என வலதுசாரிகள் கண்டுபிடித்துள்ளனர்" போன்ற உரையாடல்கள், நூலாசிரியரின் கருத்தியலை வெளிப்படுத்துகின்றது. இன்றைய மதரீதியான வன்முறை அரசுக்கு எதிராக அதேசமயம் நவதாராள வாதத்தின் விளைவுகளையும் இந்நூல் பதிவாக்கியுள்ளது. அரசு எப்பொழுதும் நீங்கள் அமைதியாக இருப்பதனையே விரும்புகின்றது.

ஷம்பாலா (Shambhala) திபெத்தின் புராண தலை நகரம். இன்றைய இந்திய அரசும், ஒரு புராண இதிகாச ஆட்சியை அமைக்கவே முயற்சிக்கின்றது. அதனால் தான் அவர்கள் புத்திஜீவிகளின் அமைதியை விரும்புகின்றனர். இன்றைய காலகட்டத்தின் கொடூரத்தைப் பதிவு செய்யும் மிக முக்கிய அரசியல் நாவல்.

# புதிய புத்தகங்கள் - திரைப்படங்கள்

– ரதன் –

## நசீர் - துனியா

கடந்த வாரம் We are one a global film festivalஇல் (http://www.weareoneglobalfestival. com/) நசீர் என்ற தமிழ்த் திரைப்படம் திரையிடப்பட்டது. இப்படம் யூரியுப் இணையத்தில் இரு நாட்கள் திரையிடப்பட்டது. பல முகநூல் நண்பர்கள் தொடர்ச்சியாகப் பரிந்துரைத்தனர். ஒரு நாள் இரவு இப்படத்தைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. இப்படத்தின் இயக்குனர் அருண் கார்த்திக். ஏற்கனவே 2015இல் சிவபுராணம் என்ற படத்தை இயக்கியிருந்தார். நசீர் இவரது இரண்டாவது படம்.

கோயம்புத்தூர் நகரத்தில் வாழும் நசீர் என்பவரது குடும்பத்தின் குறிப்பாக நசீரின் ஒரு நாள் வாழ்வே இப்படம். இயல்பு வாழ்க்கையில் மதம் இணைந்து செல்வதனையும், அதனூடாக மதத்தைத் தாங்குவோர் ஏற்படுத்தும், செயல்படுத்தும் வன்முறைகள் இயல்பு வாழ்வின் பாதையை எவ்வாறு அழிக்கின்றது என்பதையும் இயக்குனர் பதிவு செய்துள்ளார். நசீர் ஒரு துணி மற்றும் புடவைகள் விற்பனை நிலையத்தில் வேலை செய்கின்றார். அங்கு இந்துக் கடவுள்களின் சிலைகளை துடைப்பது அவரது அன்றாட வேலையாகவுள்ளது. இவ்வாறு படத்தில் பல காட்சிகள் உள்ளன.

ஒரு நகர வாழ்வில் உள்ள மொழிக் கலப்பில் நசீர் உருவாக்கப்பட்டுள்ளார். பல மொழிகளின் தாக்கம் கோயம்புத்தூரில் வாழும் முஸ்லீம்கள் மத்தியில் உள்ளது. அதன் வெளிப்பாடையும், பாதிப்பையும் படத்தில் காணலாம். இன்று நகரங்களில் வாழும் மக்கள் மத்தியில் பல மொழிகளின் தாக்கத்தைக் காணக்கூடியதாகவுள்ளது. மிகவும் நுணுக்கமாகத் திரைக் கதையை அமைத்துள்ளார் அருண் கார்த்திக். தமிழுக்கு இது புது வரவு. இவ்வளவு ஆழமாக மதத்தை கையிலெடுத்து விமர்சித்த படங்கள் மிக மிகக் குறைவு. ஜமீலா (திரைப்படக் கூட்டுத்தாபன தயாரிப்பு) போன்ற சில படங்களே முஸ்லீம் மக்களின் சமூக வாழ்வை படமாக்கியுள்ளன.

இப்படத்தைப் பற்றி மிக விரிவாக உரையாடப்பட வேண்டும். நசீர் படத்தின் மிகச் சிறப்பான தொழில்நுட்பத்தைப் பற்றியும் உரையாடப்படவேண்டும். இப்படத்தைப் பார்த்த பின்னர், டிஸ்கவரி புத்தக நிலைய அதிபர் வெடியப்பன் அனுப்பிய புத்தக பார்சலில் 'துனியா' என்ற நாவல் இருந்தது. ஷீபா இ.கே மலையாளத்தில் எழுதிய நாவலை தமிழுக்கு யூமா வாசுகி மொழிபெயர்த்துள்ளார். இந்த நாவல் குஜராத்தில் 1985இல் நடைபெற்ற மதக் கலவரங்கள், கொலைகளின் பின்னணியில் எழுதப்பட்டுள்ளது. நாவலின் முன் பகுதி மும்பையில் வாழும் ஒரு முஸ்லீம் குடும்பத்தின் வாழ்வைப் பதிவு செய்கின்றது. குடும்பத் தலைவன் கேரளாவில் இருந்து மும்பை சென்று வாழ்கின்றான். தனக்கு உதவி செய்தவரின் மகளைத் திருமணம் செய்து வாழ்கின்றார். மனைவி ஒரு முஸ்லீம். இரு மதங்களும் இவர்களை ஏன் ஏற்கத் தயங்குகின்றன என்ற கேள்வியுடன் ஷீபா நாவலின் மையப்பகுதிக்கு நகர்கின்றார்.

இவர்களது மகள் துனியா. உஸ்தாத் அஸ்மத் அலிகானை பின்பற்றத் தொடங்குகின்றார். அகமதாபாத்திற்கு பொறியியல் கல்வி கற்கச் செல்லும் துனியாவின் தம்பிக்கு என்ன நடந்தது. கலவரத்தின் பின்னரும் அவனைப் பற்றி எதுவும் தெரியவில்லை. அவன் உயிருடன் உள்ளானா?




போன்ற கேள்விகளுடன் நாவல் முடிகின்றது. இறுதிப் பகுதியில் நாவலாசிரியர் தனது விமர்சனங்களை கடுமையாக முன்வைக்கின்றார். இது எமது மனச்சாட்சிகளை கேள்வி கேட்கின்றது. ஒரு குற்ற உணர்வுடனேயே இறுதிப் பகுதியை நுகரக்கூடியதாகவுள்ளது. துனியாவை மிகச் சிறப்பாக யூமா வாசுகி மொழிபெயர்த்துள்ளார். நசீர் படத்தைப் போல் துனியாவும் பல கேள்விகளைக் கேட்கின்றது. அடிப்படையில் பொருளாதாரம் அல்லது வாழ்வாதாரம் என்பது பல விடயங்களைத் தீர்மானிக்கின்றது. இதனை நாவலும் படமும் மிகச் சிறப்பாக வெளிப்படுத்துகின்றன.

நசீர் படம் திலீப் குமாரின் ஒரு குமாஸ்தாவின் சிறுகதையை மையமாகக் கொண்டது. திரைப்படவியல் மாணவர்கள் சிறுகதையை எவ்வாறு திரைக் கதையாக்கியுள்ளனர் எனக் கற்பதற்கு ஓர் உதாரணப் படம். 79 நிமிடங்களே கொண்ட நசீருக்குக் கிடைத்துள்ள வரவேற்பு, மேலும் புதிய பல படைப்பாளிகளை உருவாக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. நீண்ட காலமாகக் கதாநாயகர்களை மையப்படுத்திய தமிழ்த் திரையுலகம் மாற்றத்தை ஏற்படுத்தத் தொடங்குகின்றது. சுயாதீன திரைப்படங்களின் தொடர்ச்சியான வருகையும், புதிய தொழில்நுட்பத்தால் திரைப்படங்கள் காட்சிப்படுத்தப்படுத்தலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் ஓர் ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்துகின்றது. நல்ல படங்களின் வருகை இதனால் அதிகரிக்கத் தொடங்கும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றது.

## ஷம்பாலா - தமிழவன்

உலகின் மிகச் சிறந்த எழுத்தாளர்களை எவ்வாறு அமெரிக்க உளவுப்படை அழித்தது என்பதனைப்பற்றி Joel Whitney இன் நூலான Finks விபரிக்கின்றது. தமிழவனின் நாவலிலும் அமர்நாத் என்ற புத்திஜீவியை எவ்வாறு அரசு உளவியல் தாக்கி நிலைகுலையச் செய்ய முயற்சிக்கின்றது என்பதனை தமிழவன் மிகவும் நுண்மையாக வெளிப்படுத்துகின்றார். இந்




நாவலில் இரு முக்கியமான பாத்திரங்கள் ஒன்று அமர்நாத் மற்றைய பாத்திரம் ஹிட்லர். பெயருக்கேற்ப குணாம்சங்களைக் கொண்டவர். இன்றைய அராஜக அரசியலின் முகமாக வெளிப்படுகின்றார். அண்மைக் காலங்களில் எங்கெல்லாம் மக்கள் எழுச்சி நடைபெறுகின்றதோ, அங்கெல்லாம் புத்திஜீவிகள் மீதான வன்முறைகள் தொடர்கின்றன. ஒன்றில் அவர்கள் கொல்லப்படுகின்றனர். அல்லது அவர்கள் மீதான உடல், உளத் தாக்குதல், அவர்களது நடவடிக்கைகளைக் குறையச் செய்கின்றது. இது எதிர் கருத்துக்களை முன்வைக்கும் ஊடகவியலாளர்கள் மீதும் நடைபெறுகின்றது. இந் நாவலை வாசித்த போது Florian Henckel von Donnersmarckஇன் The Lives of Others திரைப்படக் காட்சிகளும்

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)

## விட்ட பிழை திருத்துதற்கே நேரமில்லை



தெரிகிறது முகங்களிலே மரணபயம்
தெரிந்தாலும் தொடர்கிறது பயணமிங்கே
புரிகிறது இப்போது வாழ்க்கையிலே
புரிந்துவிட்ட புத்திகெட்ட தவறெல்லாம்
சரியென்று நாம்நினைத்த சங்கதிகள்
சகலதுமே மாபெரும் பிழைகளென்று
விரிகிறது மனங்களிலே நல்ல எண்ணம்
விட்ட பிழை திருத்துதற்கோ நேரமில்லை!

உயர்சாதி நானென்றும் உலகிலே
உள்ளவர்கள் அனைவருமே தாழ்வென்றும்
அயராமல் பொழுதெல்லாம் கதைபேசி
அடுத்தவரின் மனம் நோகச் செய்ததையும்
தயங்காது ஏழைகளின் துயரறியாது
தரணியிலே வாழ்ந்ததையும் எண்ணியெண்ணி
மயங்கிநாம் நிற்கிறோமே இன்று
மதிகெட்டுப் போனோமே அன்று!

இந்த நொடியில் உயிர்போமோ? இல்லை
இருநாளுக் கப்பாலா இதுநடக்குமென
எந்தவொரு முடிவுக்கும் வரமுடியாமல்
எப்போதும் அச்சமுடன் வாழ்கின்றோம்
சொந்தங்களோடு வாழ்கின்ற நிலையிழந்து
சோர்வுடனே அடைபட்டோம் வீட்டினுள்ளே
அந்தவொரு நொடியென்று வருமென்று
அறியாது அறிவிழந்து கிடக்கிறோமே!

செல்வத்தைச் சேர்ப்பதிலேயே குறியானோம்
செருக்கோடு வாழ்வதிலே வெறியானோம்
நல்லோராய் வாழ்ந்திடத்தான் நினைத்தோமில்லை
நாகாக்க வாழ்நாளில் உணர்ந்தோமில்லை
வல்லோராய் வாழ்ந்திருந்தால் போதுமிங்கு
வரலாற்றில் நாம்நிலைத்து நிற்போமென
செல்லாத காசாக வாழ்ந்திருந்தோம் மண்ணில்
செம்மைதராக் கொரோனாவால் விழிப்புற்றோம்!

மரணத்தின் விழிம்பினிலே நிற்கையில்தான்
மனமறிந்தும் செய்தபிழை புரிகிறது
இரணமது தொண்டைக்குள் இறங்காமல்
இடையினிலே நிற்கிறது என்செய்வோம்?
சரணமென இறைவனடி வீழ்வதல்லால்
சாவினைத் தடுப்பதற்கு வழிதானேது?
வரமொன்று பெறவேண்டும் 'சாகாவரம்'
வாரிச்செல்லும் கொரோனாவை வெல்வதற்கு!

ஒன்றாகி, இரண்டாகி, பலலெட்சமாகி
ஓர்மமாய் உயர்கிறதே உயிரிழப்பு
நன்றாகி விடுவோமோ எனஏங்கும்
நமக்கென்று கிடைக்குமோ நிம்மதிதான்?
மன்றாடிக் கேட்போமே இறைவனிடம்
மரணத்தை வென்றிட வழியுண்டாவென?
வென்றாக வேண்டும் மனிதசக்தி
வெறிகொண்ட கொரோனாவை அழிப்பதற்கு!



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்

# Love Aaj Kal - திரைவிமர்சனம்



ஞா. ஆரணி

'இந்தக் காலத்தில் காதல்' என்ற கருத்துள்ள பெயரைக் கொண்ட இந்த ஹிந்தி மொழிப் படம் 2020ஆம் ஆண்டு காதலர் தினத்தில் வெளிவந்தது. பெயருக்கு ஏற்ப இப்படத்தில் இளம் வயதினருக்கு இடையேயான தற்போதைய காதல் கதை பற்றியும் அவர்களுக்கு அறிவுரை கூறும் இன்னொருவருடைய பழைய கால காதல் கதை பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது.

Veer என்ற இளைஞன் Zoe என்ற பெண்ணுடன் பழகுகிறார். தனது இலட்சியம் முக்கியம் என்பதால் Zoeஇற்கு தீவிரமான, நிரந்தரமான ஓர் உறவைத் தேட விருப்பமில்லை. நிரந்தர உறவை விரும்பும் Veerஉம் Zoeஇடம் இருந்து சற்று விலகியே பழகுகிறார். ஆனாலும் Veer, Zoeஐத் தொடர்ந்தும் காதலித்து வருகிறார். வேறு ஆண்களுடன் பழகும் Zoeஇற்கு இது விசித்திரமாகத் தோன்றுகிறது. Veerஉம் Zoeஉம் நண்பர்களாகின்றனர்.

இந்த நேரத்தில் Zoeஇற்கும் Veerஇற்கும் பழக்கமான ஒரு கடை முதலாளியான ராஜ் என்பவர் இவர்களது உறவைக் கவனிக்கிறார். முதலில் Veerஇன் தீவிர காதலில் தன்னை அடையாளம் கண்டு கொண்ட ராஜ் Veerஐ Zoeவுடனான காதலை விட்டு விடாமல் இருக்க ஊக்குவிக்கிறார். ஆனால் Zoeவிற்கு ராஜ் அறிவுரை அளிக்கத் தொடங்கும்போது தான் கதை மாறுகிறது.



Veerஇல் தன் இளமைக் காலத்தை முதலில் காணும் ராஜ், கதை நகரும் போது Zoeஇல் தன்னைக் காணுகிறார். Zoeஇற்கு தன் முதல் காதல் பற்றிய கதையைக்கூறி Zoeஐ Veerஉடன் நிரந்தர உறவை ஏற்படுத்த முயற்சிக்கிறார்.

Zoe தனது தாய் படும் கஷ்டங்களால் உறவுக்காகத் தனது தொழிலை ஒரு போதும் தியாகம் செய்யக்கூடாது என்று உறுதியுடன் இருக்கிறார். மறுபக்கத்தில் Veer தனது பெற்றோர் சமூகத்திற்காகக் கல்யாணம் செய்ததால் சந்தோஷம் இல்லாமல் வாழ்வதைக் கண்டு, ஒருத்தருடன் தான் உறவு கொண்டால் அது முழுமனதுடன் இருவரும் விரும்பியதாக இருக்க வேண்டும் என விரும்புகிறார்.



படத்தின் பிரதம கேள்வியாக Zoe தனது தொழிலை விட்டுவிட்டு Veerஐ காதலிப்பாரோ, இல்லை Veer, Zoe இன் மனதை மாற்றித் திருமணம் செய்வாரோ என்பது இருக்கவில்லை. ஒருவர் 'கல்யாணம் செய்ய வேண்டும்' என்பதற்காக ஏன் கல்யாணம் செய்ய வேண்டும்? ஏன் திருமண உறவில் ஒருவர் மட்டும் இலட்சியத்தைத் தியாகம் செய்ய வேண்டும்? என்ற கேள்விகளை இப்படம் கேட்டுகிறது.

ராஜ்இன் காதல் கதையைக் கேட்டு Veer உடன் செல்லும் Zoe, ராஜ் ஐப்பற்றிய உண்மையை அறிகிறார். இந்த நேரம் Veerஇற்காகத் தனது தொழிலை கைவிட்டதாக Zoe உணர்ந்து, எல்லாவற்றையும் கைவிட்ட நிலையில் Zoe நிற்கிறார். அதற்குப்பிறகு என்ன நடக்கிறது என்பதை படத்தைப் பார்த்து அறியுங்கள்.

இருவருக்கிடையே நிரந்தரமாக வரும் காதல் உறவுக்கும், சாதாரணமாகப் பழகும் உறவுக்கும் இடையேயான வித்தியாசங்களையும், இவர்கள் இரண்டையும் குழப்பும்போது வரும் பிரச்சினைகளையும் இப்படம் நன்றாகக் காட்டுகிறது. ஒருவர் தனக்காக ஓர் உறவைத் தேடும் முன்பு பார்க்கக்கூடிய ஒரு நல்ல படம் இது.

# தகவல்...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

தேடிப்பிடித்து திரட்டிய தகவல்களை தரமாகப் பயன்படுத்தி தரவுகளாய்த் தந்துதவும் தகவல் தொடர்பில் சளைத்தவர்கள் நாமவல்லவென்று பணிபுரியும் பங்களிப்பு, தரமான பணியென்று பட்டியலிட்டுப் பறைசாற்றும் தகுதிபெற்று நிற்கிறது. தாய் மொழியாம் தமிழ் மொழியை நாமிழந்தோம், தரணி பாடும் தமிழரின் கலை மறந்தோம், கலாச்சார பண்புகளை பறிகொடுத்தோம் என்றெல்லாம் பரிதவிக்கும் எம்போன்றோர் உள்ளத்திற்கு உறுதுணையாய் நின்று உரமூட்டி, குளிரூட்டி நிற்கிறது. அச்சகங்கள், அறிவுக் களஞ்சியங்கள், நூலகங்கள், நூதனங்கள், இலக்கியப் படைப்புக்கள், அற்புதக் கலைகளுக்கு கலைக்கூடம் ஆங்காங்கு நிறுவி, ஊடகங்கள் வாயிலாக உழைக்கும் தமிழரின் தொலைத்தொடர்புத் தொழில்நுட்பச் சாதனைகள் என்றென்றும் ஞாலத்தால் போற்றப்படும்.

மதம்சார்ந்த ஆன்மிகத் தகவல்களை, அறிஞர்களின் அறிவுரைகள், வானளாவ உயர்ந்திருக்கும் வழிபாட்டுத் தலங்களெங்கே? வாழ்விடங்கள், வதிவிடங்கள் வேலை வாய்ப்பு தேடும் அடிப்படை பிரச்சினைகள் அனைத்திற்கும் அணைபோட்டு, ஆக்கமுறு தகவல்களை ஆணித்தரமாக அடுத்தடுத்து, ஒலியலையாய், ஒளியலையாய் ஒருங்கிணைந்து தினம்தோறும் எம்மவர்க்கு வழங்கி வரும் ஊடகத்தகவல் தொழில்நுட்பம் ஊறறிந்த சாதனைகள். அரசியலில், ஆன்மீகத்தில் அங்காடித் தெருக்களெல்லாம் தமிழரின் தேவை எதுவென்றும், சமயலறைக் கதவுகளைத் திறப்பதற்குமே நேரமில்லை எனத் தத்தளிப்போர் வாய்க்கு ருசியாக வகைவகையான உணவகங்கள் எங்குண்டு? வீடு மனை வாங்கவென விரைந்திடுவோர், வியாபார நிலையங்களை விஸ்தரிக்கும் வழிமுறைகள், திருமண வீடா? திருவிழாவா? திருத்தல யாத்திரையா? பிறந்த நாள் விழாவா?




களியாட்ட விழாவா? இவையனைத்தும் விளம்பரமாய் விபரணமாய் வெளிக்கொணரும் தகவல் தொழில் நுட்பத்தில் தமிழரின் பங்களிப்பு ஏராளம்.

கணினி யுகத்தில் கணினிகளின் தொழில் நுட்பச் செயல்பாட்டை துல்லியமாய்க் கற்றறிந்து, துரிதகதியில் ஊடகத்துறைக்குள் உட்புகுத்தி, உட்கார்ந்த இடத்தில் உலகநடப்புக்கள் அத்தனையும் உள்வாங்கிக் கடின உழைப்பின்றி காரியங்கள் ஆற்றிவரும் தகவல்தொடர்பில் தமிழரின் பங்களிப்பு பளிச்சென்று தெரிகிறது. கனடிய மண்ணிற்கு கௌரவத்தை ஏற்படுத்தி ஊடகத்துறையின் உயிர்நாடியாய் அமைந்த தொலைபேசிச் சாதனத்தை கண்டறிந்து ஊடகத்துறைக்கு அடியெடுத்துக் கொடுத்த இந்நாட்டு விஞ்ஞானி அலெக்ஸ்சாண்டர் ஹிரஹாம் பெல் (Alexander Graham Bell) இன்றிருந்தால் மகிழ்ந்திருப்பார். ஊடகத்துறைக்குள் உட்புகுந்த அதிநவீன சாதனங்கள் அனைத்தையும் அன்றிலிருந்து இன்றுவரை கற்றறிந்து வளர்ச்சித்துறைக்குள் உட்புகுத்திப் பணிபுரியும் தகவல் தொழில்நுட்பத்தில் தமிழரின் பங்களிப்பு பார் புகழும்.

*வாழ்க! தகவல் தொழில் நுட்பம்*
*வளர்க! தமிழரின் பங்களிப்பு*

# படித்ததில் பிடித்தது



நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

- சிவகுமார் -

எல்லோரும் என்னைக் கேலி செய்கின்றனர் என்று வருத்தப்பட்டு எழுதிய இளைஞர் ஒருவருக்கு, எழுத்தாளர் பாலகுமாரன் அவர்கள் வழங்கிய அறிவுரை......

1. புத்தகங்களைத் துணை கொள்.
2. உடலுழைப்பை அதிகரி.
3. சமூகம் புறக்கணித்தவற்றைக் கைவிடு.
4. குளிர்ந்த நீரில் குளி.
5. கொஞ்சமாய்ச் சாப்பிடு.
6. தியானம் கைக்கொள்.
7. இரவு உறங்கும் முன் நெடுந்தொலைவு நட.
8. உடுப்பில் வெள்ளை நிறத்தைப் பழக்கமாக்கு.
9. உணவில் கீரை சேர்த்துக் கொள்.
10. எத்தனை வலித்தாலும் அழாதே. சிரி.
11. ஆத்திரம் அகற்று.
12. கேலிக்குப் புன்னகை தா.
13. கோபத்திற்கு மௌனத்தைக் கொடு.
14. நட்புக்கு நட்பு செய்.
15. வேலை சொல்லித் தருபவரிடம் மிகப் பணிவாக இரு.
16. அலட்சியப்படுத்தினால் விலகி நில்.
17. அன்பு செய்தால் நன்றி சொல்.
18. இதமாகப் பேசு.

நீ ஜெயிப்பாய்.... இது நிச்சயம்!
வாழ்க்கையில் உன்னத நிலைக்கு வருவாய். இது சத்தியம்.




சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416.754.7338 / 416.724.7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
Advanced function
Calculus & vectors
Data management
All Classes available in Scarborough & Stouffville
Contact: 647.340.9490 / 416.732.2228



Mr.S.F.Xavier (Teacher)

# MORTGAGE SOLUTIONS

## SAVE UPTO 75% REFINANCE

## MONTHLY SAVING $2,409

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credit Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.9% | | $1,605.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,524.55 |



**KIRUBA THANABALASINGHAM**
Mortgage Agent Lic# M12002440
info@mortgagesolutions.ca
www.MortgageSolutions.ca
Ultimate Mortgage and Finance Solutions Inc. Lic#11995

## Prime + 1% Lower Rate

## $50,000 EQUITY LOAN

## GET APPROVED WITHIN 24 HOURS


## 416.298.2777

## $375 Mo.

# MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5



BUYING OR SELLING
Indra Michael Xavier
Sales Representative
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
905-201-9977


we always care at . . .
Bridletowne Dental
Dr. Jeyapalan. BDS., DDS.
Dentist
416 492 3775
Bridletowne Dental
2555 Warden Avenue. Scarborough M1W 2H5
( close to Warden and Finch , in the TD BANK PLAZA)


Vany Jeganmohan
Realtor/Financial Advisor
416.670.7436
www.vanyhomes.ca
www.vjsfinancial.ca
✓ Buy/Sell/ Lease
✓ Life Insurance
✓ Super Visa
✓ Non Medical
✓ RESP
VJS Financial Services
We ease your cost of living
5215 Finch Ave East, Unit 222 Toronto ON M1S 0C2



PLUS YOU
DRIVING SCHOOL
CERTIFIED ROAD SAFETY INSTRUCTOR
NOW HIRING
DRIVING INSTRUCTORS
Training will be provided
For more Info:
Balan 416.999.7727


வீடு வாடகைக்கு...
வாங்க...
விற்க...
Vasanta Raviendren
Cell: 416-716-1540
Life Insurance
Non Medical
Super Visa
RESP
Mega Financial Group
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East. Unit 203 Toronto ON M1S 0C2


IT'S YOUR MOVE...
Let me help you make the right one.
Century 21
Titans Realty Inc.,
Brokerage.
Sudharshan
Muthucumaraswamy
Broker
Direct: 416.567.6209
TEAM TITANS
Residential / Commercial / Purchase / Sale / Investment / Leasing


வீடு வாங்க, விற்க நட்பான சேவை
Ponnambalam Mahalingam
Sales Representative
Dir: 416.729.0955
arunponmahal@gmail.com
HomeLife/ Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr., Suite 205 Markham ON L3S 4N8 Bus: 905.201.9977
வருமான வரி சேவை Income Tax e-File
416.288.1548 / 416.729.0955


Coaching • Yoga • Meditation • Healing • Astro Guidance
S&S EVOLVE
Varany Sivathasan
Life Coach • Healer
Yoga & Meditation Instructor
416.875.0553
info@ssevolve.com
Unit 8, 151 Nashdene Court, Scarborough,ON M1V 2T3


ATSEY
FINANCIAL GROUP LTD
MORTGAGE STRESS?
WORK WITH ALL MAJOR LENDERS
2nd and private financing available.
Call 416.333.9393
MORTGAGE ALLIANCE
PURCHASE • REFINANCE • INVESTMENT PROPERTIES


ROYAL MEDICAL AND
PROFESSIONAL CENTRE
2225 Markham Road, Scarborough
UNITS AVAILABLE FOR SALE
Amalraj Joseph
Sales Representative
416.300.8294
amalraj.joseph@gmail.com
HomeLife/GTA Realty Inc. Brokerage*


B.J ரெய்லரிங் அன் ஜுவலரி
TAILORING & JEWELLERY CLASSES
We provide training in
Jewellery making and Tailoring
தையல் பயிற்சி மற்றும் ஜுவலரி செய்யும் முறைகள்
கற்றுக் கொடுக்கப்படும்
தொடர்புகளுக்கு: 416-720-4472
email: jegathees2007@gmail.com


HOMES & CONDOS FOR SALE
Brock/Rossland - Whitby
For sale
Gas Station
York St/Bremner St - Toronto
$699,900
Condo Apt - 2BR/1WR
Cambray Rd/North St - Kawartha
$369,900
Bungalow -2BR/1WR
1st & 2nd mortgage availabe upto 1Million
Specialized in New Condos & Cottages
A.ANTON JEEVA,FRI
Broker
Dir: 416.575.5055
RE/MAX
anton.jeeva@gmail.com
www.getanton.com
ROYAL PROPERTIES INC
Phone: (416) 321-0110


www.tamilvanakkam.com
Tamil
VANAKKAM
தமிழ் வணக்கம்
உலகத் தமிழர்களின் இணைப்புப் பாலம்